பக்கங்கள்: 19

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 16 புதன்கிழமை 01.01.2020 கதிர் 57

### இனிது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆறு நாள்கள் இருக்கையில் டாக்டர் ராஜித சேனரத்னவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட – வெள்ளை வான் கடத்தல் விவகாரம் தொடர்பான – ஊடகவியலாளர் மாநாட்டின் அதிர்வு தொடர்கின்றது.

இந்த பக்கம் 02

## சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் என்றால்

# நாட்டின் சுதந்திர தினம் தேசிய துக்க நாளாகும்!

### அரசுக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஜனவரி 01

இலங்கையின் சுதந்திர தினத்தன்று சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும் என அரசு கூறுமாயின் வடக்கு, கிழக்கு மக்கள் அன்றைய நாளை தேசிய துக்க தினமாக அனுஷ்டிக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள் எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் இதனால் பல்லின மக்கள் இடையே பிளவுகள் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

பக்கம் 03

## டுபாயில் 3 இலங்கையருக்கு மூன்றரை வருடங்கள் சிறை

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தார்களாம்

டுபாயில் கைது செய்யப்பட்ட மட்டக் களப்பு இளைஞர் உட் பட மூவருக்கு மூன் றரை வருடச் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்பை சேர்ந்த குணதாஸ் டிரான் மற்றும் ரமேஷ் பெர்னாண்டோ, விஸ்வாடிசில்வா ஆகி யோருக்கே சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்தொடர்பான புகைப் பக்கம் 03

## விரைவில் மலரவுள்ளது விக்கியின் மாற்று அணி

யாழ்ப்பாணம்,ஜன.01

வடக்கு மாகாண முன்னாள் முதல மைச்சர்சி.வீ.விக்னேஸ் வரன் தலைமையி லானமாற்றுஅணியை உருவாக்கும் முயற்சி கள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின் றது.

இதனையடுத்து மிக விரைவில் கூட்ட ணிக்கான புரிந்து ணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டு, கூட்டணி தொடர்பான உத்தி பக்கம் 03

## சோற்றுப்பானை சரிந்ததில் சிக்குண்ட 2 வயது பாலகி 9 நாள்களின் பின் சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 01

அடுப்பில் இருந்த சோற்றுப் பானை சரிந்து வீழ்ந்ததில் சிக் குண்ட 2 வயதுப் பாலகி 9 நாள் களின் பின் சிகிச்சை பயனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் மணியத்தோட் டத்தைச் சேர்ந்த யசிந்தன் கஜ லக்சி (வயது 2) என்ற பாலகியே இவ்வாறு உயிரிழந்தார்.

தாயார் கடந்த 23 ஆம் திகதி நிலத்தில் மண்ணெண்ணெய் அடுப்பில் சோறு சமைத்துள் ளார். அப்போது பாலகி அடுப்பின் அருகே இருந்துள்ளாள்.

பாலகி எதிர்பாராத விதமாக அடுப்பை உதைந்துள்ளார். இதனால் பக்கம் 03

## தூதரகப் பணியாளர் விடுதலை சுவிற்சர்லாந்து அரசு வரவேற்பு!

கொழும்பு,ஜன.01

கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர், பிணையில் விடுவிக் கப்படுள்ளமையைவர வேற்பதாக சுவிஸ் மத் திய வெளிவிவகார அமைச்சு அறிவித் துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சுவிட்சர்லாந்து தூதரக அதிகாரியான கானியா பெனிஸ்டர் பிரான் ஸிஸை பிணையில் விடுவிப்பதற்குக் கொழும்பு பிரதம நீதி வான் நீதிமன்றம் நேற்று பக்கம் 03

## அரச ஊழியருக்குச் சம்பள உயர்வு இடைக்கால அரசால் தரமுடியாது

### புதுவருடத்தில் ஏமாற்றச் செய்தி

கொழும்பு,ஜன.01

மக்கள் ஆணை யின் படி ஜனாதிபதியே நியமிக்கப்பட்டுள்ளார். மாறாக, பிரதமர் மற் றும் இடைக்கால அர சாங்கம் மக்களால் நிய மிக்கப்படவில்லை.

இவ்வாறு நியமிக்கப் பட்ட இடைக்கால அர சாங்கத்தினால் ஒரு வரையறைக்குட்பட்டே செயற்பட முடியும்.

எனவே மக்கள் ஆணையின்றிஅமைக் கப்பட் பக்கம் 03

## கனரக வாகனத்துடன் ஓட்டோ மோதி விமானப் படையினர் நால்வர் மரணம்!



கொழும்பு, ஜன. 01

கொழும்பு – கண்டி பிரதான வீதியின் வரகாபொல, தும்ம லதெனிய பகுதியில் இடம்பெற்ற விபத்தில் விமானப் படையினர் நால்வர் பக்கம் 03

## வவுனியாத் தாக்குதலை எதிர்த்து யாழில் கண்டனப் போராட்டம்!

ஜனநாயக வழியில் நீதி கேட்டு வவுனியாவில் போராடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உற வினர்கள் மீது நேற்று முன்தினம் மேற் கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலைக் கண்டித்து, யாழ்ப்பாணத்தில், நாளை கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தப் போராட்டம், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக நாளை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.




## காருக்கும் ஸ்ரேலிங் பவுண்ட்ஸுக்கும் ஆசைப்பட்டு 31 லட்சம் ரூபாவைப் பறிகொடுத்த யாழ். குடும்பம்!

யாழ்ப்பாணம்,ஜன.01

பி.எம்.டபிள்யூ காருக்கும், ஸ்ரேலிங் பவுண்ட்ஸுக்கும் ஆசைப்பட்டு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணின் குடும் பம் 31 லட்ச ரூபாவை இணைய வழி மோசடிக் கும்பலிடம்இழந் துள்ளது.

கணவன், மன்னாரில் பணி யாற்றி வரும் நிலையில் அவரது மனைவியும் , மகளும் யாழ்ப் பாணத்தில் வசித்து வருகின்றார் கள். ஒரு மாதத்துக்கு முன்னர் மகளின் கைத்தொலைபேசிக்கு லண்டனில் நடந்த சீட்டிழுப்பு ஒன்றில் உங்கள் கைத்தொலை பேசி இலக்கத்துக்கு புதிய ரக பி.எம்.டபிள்யூ பக்கம் 03

## நாளை கடமை ஏற்கிறார் வடக்கு மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், ஜன 01

வடக்கு மாகாணத் தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ்,நாளை2ஆம் திகதி தமது கடமை களை உத்தியோக பூர்வமாகப் பொறுப் பேற்கவுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையின் விசேடதர அதிகாரியான பி.எஸ். எம்.சார்ள்ஸ், வடக்கு மாகாண ஆளுநராக நேற்று முன்தினம் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்கம் 03

# வட மாகாண எம்.பிக்களும் படித்த பல்துறை வல்லுநர்களும் மனதுக்குச் சரியென்று பட்டதை வெளியிடத் தயங்குவார்கள்

## இப்படிக் கூறுகின்றார் நீதியரசர் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜன.01

“பொதுவாக வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் படித்த பல்துறை வல்லுநர்களிடமும் ஒரு தயக்கத்தை நான் அவதானித்துள்ளேன். தமது மனதுக்குச் சரியென்று பட்டதை அவர்கள் வெளியிடத் தயங்குவார்கள். தமக்குள் பேசிக்கொள்வார்கள். ஆனால் பிற இனத்தார் முன்னிலையில் அவற்றை வெளிப்படுத்தமாட்டார்கள். இது முப்பது வருட கால யுத்தத்தின் பாதிப்பாக இருக்கலாம்.

– இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கின்றார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன். தமது வாராந்த கேள்வி – பதில் அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதன் விவரம் வருமாறு:–

கேள்வி:– நீங்கள் ஏன் இத்தருணத்தில், அதாவதுபுதிய ஜனாதிபதி ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கும் வேளையில், மற்றும்புதிய நாடாளுமன்றம் ஒன்று பரிணமிக்கப்போகும் வேளையில். சிங்களவர்கள் பற்றியும் பௌத்தம் பற்றியும் உங்கள் கருத்துக்களை வெளிப்படையாக வெளியிட்டு வருகின்றீர்கள்? தெற்கில் உங்கள் மீது பலத்த எதிர்ப்பு உருவாகி வருவதைநீங்கள்உணரவில்லையா?

பதில்:– என்னிடம் தெற்கிலிருந்து ஆங்கிலத்தில் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அதற்குப் பதில் அளித்தேன். அக் கேள்வியானது முஸ்லீம்களும் மலையகத் தமிழர்களும் மத்திய அரசாங் கங்களுடன் கைகோர்த்து முன்செல்ல உடன்படும்போது ஏன் வட கிழக்குத் தமிழர்கள் முரண்டு. பிடிக்கின்றார்கள் என்றவாறு அமைந்திருந்தது. என்னுடைய பதிலில் வடகிழக்குத் தமிழ் மக்களின் பாரம்பரியம் பற்றியும் தனித்துவம் பற்றியும் விளக்கவேண்டியஅவசியம் ஏற்பட்டது. அப்போது தான் சிங்கள மக்கள் தம் பாரம்பரியம் பற்றிக் கொண்டிருக்கும் தவறான சிந்தனைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. பத்து வருடங்களுக்கு மேல் ஒரு சட்ட ஆசிரியராக இருந்த நான் கேள்விகள் கேட்கப்படும் போது அவற்றிற்கான தக்க பதில்கள் எவ்வகையான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்று உய்த்துணர முடியாத நிலையில் இருக்கவில்லை. குறித்த கேள்வி இந்தக் கால கட்டத்தில் வெளியே. வரவேண்டிய சில விடயங்களை அம்பலப் படுத்த உதவியது. அந்தச் சந்தர்ப்பத்தை நான் நழுவ விடவில்லை.

இது வரையில் தனித்து நாங்கள் எங்கள் மத்தியில் பேசிவந்த சில விடயங்களை நான் அம்பலப்படுத்தியுள்ளேன். நான் கண்ட உண்மையை வஞ்சகமில்லாமல் வெளிப்படுத்தியுள்ளேன். நான் வெளிப்படுத்திய உண்மைகள் நான் வாசித்தறிந்த விடயங்கள் மட்டுமல்ல, பல சரித்திர ஆசிரியர்களுடனான கருத்துப் பரிமாற்றமும் அவ்வுண்மைகளை ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. அவர்கள் சிலரிடம் “ஏன் இவற்றை வெளிப்படுத்த நீங்கள் முன்வரவில்லை?” என்று கேட்டபோது “அது எப்படி சேர்?” என்று மட்டும் பதில் இறுத்தார்கள். நாளை எனக்கொரு பக்க உதவி வேண்டுமென்ற நிலைவந்துவிட்டால் இவர்கள் ஒருவரேனும் என் சரித்திரம் பற்றிய கருத்துக்களை ஆதரிக்க முன்வருவார்களோ தெரியாது! நான் செல்லும் பாதை ஆபத்தானது என்பது புரிகின்றது.

பொதுவாக வடமாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் படித்த பல்துறை வல்லுநர்களிடமும் ஒரு தயக்கத்தை நான் அவதானித்துள்ளேன். தமது மனதுக்குச் சரியென்று பட்டதை அவர்கள் வெளியிடத் தயங்குவார்கள். தமக்குள் பேசிக்கொள்வார்கள். ஆனால் பிற இனத்தார் முன்னிலையில் அவற்றை வெளிப்படுத்தமாட்டார்கள். இது முப்பது வருட கால யுத்தத்தின் பாதிப்பாக இருக்கலாம். எமது கருத்துக்களை, எமது உணர்வுகளைக் கட்டுப்படுத்தி கட்டுப்படுத்தி நாம் பல விடயங்களைப் பகிரங்கமாகப் பேசத் தயங்குகின்றோம் என்றே நான் காண்கின்றேன். இவ்வாறான சூழல் என்னைப் போன்றவர்களைப் பாதிக்காததாலோ என்னவோ என் கருத்துக்களை வெளிப்படையாகக் கூறக் கூடியதாக உள்ளது. அன்றுந்தான் இன்றுந் ‘தான் எனக்கு உண்மை’ என்பது முக்கியமானது. நீதிபதியாகப் பலவருட காலம் கழித்ததாலோ என்னவோ எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு என்ற வள்ளுவர் வாக்கியம் மனதில் ஆழப்பதிந்துள்ளது.

ஒருபக்கம் எனது வயது எனக்கு ஒரு பக்கபலமாக இருக்கின்றது. மறுபக்கம் என் இறைநம்பிக்கை இன்னொரு பக்கபலமாக இருக் கின்றது. கொழும்புத் தமிழர் ஒரு வர் நான் மலிவான ஜனரஞ்ச கத்தைப் பெற இவ்வாறு கூறிய தாகத் தனதுகருத்தைவெளியிட்டுள்ளார் என்று அறிகின்றேன். மேலும் இனக்கலவரம்ஒன்றுவெடிக்குமோ என்றகவலை அவருக்கு! சிங்கள மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டிருக்கும் நான் கொழும்பில்பிறந்துவளர்ந்தவன். அங்குசென்றுவரவேண்டியவன். எனது குடும்பத் தாரும் ஆதனங்களும் அங்கு தான் உண்டு. என் வாழ்க்கை யையும் எனது பாதுகாப்பையும் மட்டும் நான் நினைத்திருந்தால் இவ்வாறான கருத்துக்களை என்னுள்ளேயே பூட்டிவைத்திருப்பேன். மலிவான ஜனரஞ்சகத்திற்காக என்னையே நான் தியாகம் செய்யவேண்டிய அவசியம் எனக்கில்லை. ஆனால் இவற்றை எல்லாம் தெரிந்தும் எனது கருத்துக்களை வெளிப் படையாக வெளிக்கொண்டுவந்த தற்குக்காரணம்உண்டு. அதுதான் நீங்கள் கூறிய காரணங்கள்.

ஒன்று – புதிய ஜனாதிபதி. மற்றொன்று – வரப்போகும் புதிய நாடாளுமன்றம்.

சென்ற ஜனாதிபதித் தேர்தல் ஒருவிடயத்தைப்பளிச்செனத் தெரியப்படுத்தியுள்ளது. நாடு கருத்துக்களின் அடிப்படையில் துருவமயப்படுத்தப்பட்டுள்ளமை தெரிகின்றது. சிங்கள மக்களின் சிந்தனைகள் வேறு, தமிழ் மக்களின் கருத்துக்கள் வேறு என்பது புலப்பட்டுள்ளது. புதிய ஜனாதிபதிஅவர்கள்சிங்களபௌத்தத்தை நிலைநிறுத்த முன்வந்துள்ளார். அதற்கு சிங் களப் பொதுமக்கள் பெருவாரி யாக வாக்களித்துள்ளார்கள். அந்த அடிப்படையில் வட கிழக்கு மாகாணங்களில் பௌத்தகோயில்கள், விகாரைகள், சின் னங்கள் யாவும் விரைவில் நிமிர்ந் தெழ இருக்கின்றன.

சரித்திரம்தெரியாதவிஞ்ஞான அறிவுபடைத்த சிலர் இது ஒரு பௌத்தநாடுஎன்றும் பௌத்தத் திற்கு முதலிடம் கொடுப்பதில் தமிழர்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும் கூறியுள்ளார்கள். இது எந்த அளவுக்கு எம்மைப் பாதிக்கப் போகின்றதென்று அவர்கள் சிந்தித்தார்களோ தெரியாது. பௌத்த சின்னங்களை வடகிழக்கில்நிறுவ சுமார். ரூ. 500 கோடி (சரியான தொகை எனக்கு நினைவில்லை) பாதீட்டில் ஒதுக்கியபோது எமது தமிழ்த் தலைவர்கள் அது பற்றித் தெரிந்தும் வாளாதிருந்தனர். காரணம் அவர்களுக்கு ரூ.300 கோடி தரப்போகிறார் என அப்போதைய பிரதமமந்திரி அறிவித்திருந்தார். இது தான் எமது பிரச்சினை. அரசாங்கங்களுடன் சேர்ந்து போங்கள், சேர்ந்து போங்கள்என்று பலர் எமக்கு அறிவுரை தருகின்றார்கள். சேர்ந்து போனால் அவர்கள் எம்மை வாங்கிவிடுவார்கள் என்பதை இவர்கள் உணர்வதில்லை. ரூ.300கோடிகிடைக்கின்றதென்று அறிந்தவுடன் எம் தலைவர்கள் வாய் பேசாமடந்தையர் ஆகிவிட்டார்கள். தற்போது வட கிழக்கில் புத்த சமய சின்னங்கள்சமமாகவந்துகொண்டிருக்கின்றன. அவற்றைத் தடுக்கமுடியாமல் இருக்கின்றார்கள் எங்கள் தமிழ்த் தலைவர்கள் என்று கூறப்படுபவர்கள்.

பொருளாதார விருத்தி என்று அரசாங்கம் கூறும் போதும் நாங்கள் ஒன்றை மனதில் வைத்திருக்க வேண்டும். உங்களுக்கு ஆலைகளைத் தந்து ஆதாயங்களை மத்தி சுருட்டிவிடும். இப்பொழுதே எமது வளங்கள் சூறையாடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எம்மால் தடுக்க முடியாமல் இருக்கின்றோம். இராணுவத்தை வைத்துக் கொண்டு பொருளாதார விருத்தி செய்தால் என்ன நடக்கும் என்று எம்மவர் சிந்திக்கின்றார்கள் இல்லை. இன்றைய ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் இராணுவத்தினர் அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகள் ஆகிவிட்டார்கள். இனி அரசாங்கம் செய்யவிருப்பதை மக்கள் தடுப்பார்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான ஒரு சூழலில் தான் நான் இந் நாட்டின் சரித்திரம் பற்றிய உண்மைகளை வெளிக் கொண்டு வர அவசியம் ஏற்பட்டது. சிங்கள, பௌத்தர்கள் பலருக்கு, முக்கியமாக பௌத்த பிக்குகளில் பலருக்கு உண்மை வரலாறு தெரியும். ஆனால் அவற்றை வெளிவர விடாது இது வரை சிங்கள மக்களை அறியாமையில் உழல வைத்து உசுப்பேத்தி வந்துள்ளார்கள் அவர்கள். அண்மையில் மேர்வின் சில்வா ஆடிய கைமுனு வாளாட்டம் நினைவிருக்கலாம். தமிழ் மக்களைவெளியேற்றிஇந்தநாட்டைச் சிங்கள பௌத்தநாடு என்று பிரகடனப்படுத்த அவர்கள் காத்திருக்கின்றார்கள். குறுகிய நலன் கருதி எம்மவரும் இது சிங்கள பௌத்த நாடுஎன்றே கூறத் தலைப்பட்டுள்ளனர். வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் இரஞ்சித் ஆண்டகை அடிப்படை தெரியாது அரற்றுகின்றாரா அல்லது அடிவாங்கப் பயப்பட்டு இது ஒரு பௌத்தநாடு என்கிறாரா தெரியவில்லை. ஆனால் உண்மை அதுவன்று.

வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளை வேண்டுமானால் சிங்கள பௌத்த நாடு என்று கூறலாம். வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ்ப் பேசும் மக்களே பெரும்பான்மையினர். அவர்கள் என்றென்றும் வடக்கு கிழக்கில் பெரும்பான்மையினராக இருந்து வந்துள்ளனர். எம் மக்கள் கிறிஸ்தவம், இஸ்லாம், சைவம் போன்ற மதங்களையே சார்ந்தவர்கள். பௌத்தத்திற்குச் சென்ற எமது ஆதித்தமிழ்மக்கள்கூட பௌத்தம் வேண்டாம் என்று திரும்பவும் சைவர்கள் ஆகிவிட்டார்கள். ஆகவே வடக்கு கிழக்கை சிங்கள, பௌத்த அடைமொழிக்குள் கொண்டு வரமுடியாது. இதை உணர்த்தவே நான் உண்மைகளை வெளிய. கொண்டு வருகின்றேன். 1956 இல் வடக்கையும் கிழக்கையும் இணைத்து ஒரே/ மொழியைத் திணித்தனர். இப்போது, வட கிழக்கிலும் பௌத்தத்தைத்திணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. எனவே இவ்விடயம்ஊர்அறியவேண்டும். உலகம் அறியவேண்டும். முக்கியமாக எமது மக்கட் தலைவர்கள் அறியவேண்டும்.

நான் நாளை மறைந்து விட்டாலும் நான் தொடக்கியுள்ள கருத்துப் பரிமாற்றம் கட்டாயமாகச் சிங்கள மக்களைச் சிந்திக்கச் செய்யும். இப்பொழுதே பல சிங்கள இளஞ் சமுதாயத் தம்பிமார்கள் உண்மையைத் தேடத் தொடங்கிவிட்டார்கள். ஆகவே, தெற்கில் என் மீது பரவலான எதிர்ப்பு எழுந்துள்ளதை அறிவேன். உண்மைச கசக்கும் என்பதற்கு அது எடுத்துக்காட்டு. – என்று உள்ளது


## இறுதிக்கிரியைகள் பற்றிய அறிவித்தல்

### கந்தையா சண்முகசுந்தரம்

[இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, ஹாட்லி கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை]



கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சண்முகசுந்தரம் (இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர்) கடந்த **(29.12.2019)** ஞாயிற்றுக் கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(01.01.2020)** புதன்கிழமை முற்பகல் **10.00** மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

“அரவிந்தம்”
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:- இலங்கை: 0212263562, முகுந்தன்- (வாட்ஸ்அப் இல.):+14168303102
அபிராமி - (வாட்ஸ்அப் இல.): +14168389575 இளவேந்தன் - (வாட்ஸ்அப் இல.):+4917640594034


## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர் மாநாட்டில் ராஜித சேனாரத்ன எம்.பியினால் கொண்டு வந்து முன்நிறுத்தப் பட்ட இருவர், மஹிந்தவின் முன்னைய ஆட்சிக் காலத்தில் வெள்ளைவான் கடத்தல் விவகாரங்களோடு தாங்கள் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் என்ற சாரப்பட மேற்படி ஊடக மாநாட்டில் ஒப்புதல் வாக்குமூலமளித்துப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தினர். இப் போது அவர்கள் விளக்கமறியலில்கம்பிஎண்ணுகின்றார்கள்.

தப்பித் தவறி நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வென்றிருந்தால் இந்த இருவரும் அரச கூட்டுத் தாபனங்களின் தலைவர்களாகவோ அல்லது வெளிநாடொன்றுக்கான இலங்கையின் தூதுவர்களாகவோ அல்லது அது போன்ற ஒரு அரச பதவியிலோ இருந்திருப்பர். ஆனால் அவர்களின் துரதிஷ்டம் போலும், சஜித் தோற்றுவிட்டார்.

அதனால் அட்டமத்துச் சனியின் பார்வை அவர்கள் இருவர் மீதும் விழுந்து விட்டது. அவர்கள் கூண்டுக்குள்.

அவர்களை ஊடக மாநாட்டுக்குக் கூட்டி வந்த டாக்டர் ராஜித சேனாரத்ன மட்டும் முற்கூட்டியே தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தமையால் அவரை அங்கு வைத்தே கைது, செய்து அந்த ஆஸ்பத்திரியில் தடுப்பில் இருக்கின்றார் என சிறைத்தரப்பு கூறுவதுடன் விடயம் முடிந்துவிட்டது. அவரை சிறைக் கம்பிக்குப் பின்னால் நிறுத்த முடியவில்லை.

அவர் பிணையில் வெளியே மீண்டுவிட்டார். ஆனாலும் அவருக்குத் தலையிடி இன்னும் குறையவில்லையாம்.

அவரது பிரதான சகாக்களில் ஒருவரான – அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ரூமி மொஹமட் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் தேடப்பட்டு வந்த நிலையில், அவர் நேற்று நீதிமன்றத்தில் சரணடைந்தமையை அடுத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

டாக்டர் ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராக இருந்த போது அவரினால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவராக ரூபி மொஹமட் நியமிக்கப்பட்டார்.

மேற்படி வெள்ளை வான் தொடர்பில் ஊடக மாநாட்டில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கு இருவரையும் இவர்தான் பல லட்சம் ரூபா வெகுமதிக்கு ஒழுங்குபடுத்தியவர் என்று புலன் விசாரணையாளர்கள் கூறுகின்றனர்.

இவரை ஒருவாறு குற்றப் புலனாய்வாளர்கள் மடக்கியிருக்கின்றமையால், இந்த வெள்ளை வான் நாடகத்தின் முக்கிய பல விடயங்கள் இனிக் கட்டவிழும் என எதிர்பார்க்கலாம்.

மலிந்தால் சந்தைக்கு – சந்திக்கு – விடயங்கள் வரும். பொறுத்திருந்து பார்ப்போம்.

–மின்னல்–

தமிழ் தேசிய இனத்தின் உரிமை வாழ்விற்கான கனவுகளை வெல்ல

# ஆண்டு மலர்வில் மீண்டு எழுவோம் புத்தாண்டுச் செய்தியில் டக்ளஸ்

தலை நிமிர்வைத் தரும் உரிமை வாழ்விற்கான கனவுகளை வெல்ல தமிழ் தேசிய இனம் ஆண்டு மலர்வில் மீண்டு எழ வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயாக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானாந்தா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்து செய்தியில் –

'வீழ்வோம்.ஆயினும் மறுபடி எழுந்து உரிமையுடன் வாழ்வோம்' என்பதே தமிழ் தேசிய இனத்தின் உறுதி மொழி.

இந்த உறுதி மொழியை ஏற்று தமிழ் தேசிய இனத்தின் நெடுங் கனவை வென்றிட பிறக்கின்ற புத்தாண்டிலும் நாம் உழைப்போம் என உறுதி கொள்கிறோம்.

எமது மக்களின் நெடுங்கனவை நோக்கிய பயணத்தை வெல்ல முடியாதபடி ஏமாற்று வித்தை காட்டி எமது மக்களை ஆழ்ந்த மயக்கத்தில் வைத்திருந்த இருண்ட காலம் இன்று ஒழிந்து போனது.சியலுரிமை, அபி விருத்தி,.அன்றாட அவலங்களுக்கான

தீர்வு நோக்கிய எமது இலட்சியப்பணிகளுக்குகுறுக்கேவீழ்ந்து கிடந்த தடைக்கற்கள் இன்று அகன்று போயின. தமிழ் தேசிய இனத்தின் உரிமை நோக்கிய கனவை ஒரு தோளிலும் அரசுடனான தேசிய நல்லிணக்க உறவுகளை மறு தோளிலும் சுமந்து நடக்கும் எம்மை நோக்கி இன்னமும் பலமாக மக்கள் இன்று அணி திரண்டு வருவதையிட்டு நான் அகமகிழ்ந்து வரவேற்கிறேன்.

தவறான பாதைகளை தெரிவு செய்து, மாய மான்களை பின் தொடர்ந்து ஓடியதால்,கடந்து போன ஒவ்வொரு புத்தாண்டுகளும் தமக்கு புது மகிழ்வை தருவதற்கு மாறாக,தொடர்ந்தும் துயர் சூழ்ந்த வாழ்வையே தந்திருப்பதாக எமது மக்கள் தம் தவறை எண்ணி இன்று வருந்துகின்றனர்.

பிறந்திருக்கும் புத்தாண்டு எமது மக்களுக்கு புது நிமிர்வை தர வேண்டும். சூழ்ந்திருக்கும் துயர்கள்யாவும்தூரவிலகவேண்டும்.

மக்களின் மகிழ்ச்சியும் மாற்றங்களும் ஒரு போதும் தாமாக நிகழ்வதில்லை.எமது மக்கள் சரியான திசைவழி நோக்கி விழித்தெழுதல் ஒன்று மட்டுமே மாற்றங்களுக்கு வழி சமைக்கும்.

ஆற்றலும்,ஆளுமையும், மாற்றத்தை நோக்கிய விருப்பமும் மிக்க எமது வலிய கரங்களைப் பலப்படுத்துவதே பிறந்திருக்கும் புத்தாண்டை மகிழ்ச்சி தரும் ஆண்டாக மாற்றும்.இலட்சிய தேரின் வடம் பிடித்து சேர்ந்திருப்போம் வாருங்கள். சகலருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சோற்றுப்பானை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுப்பில் கொதி நிலையில் இருந்த சோற்றுப் பானை பாலகியின் மீது வீழந்துள்ளது.

பாலகியின் உடல் முழுவதும் சுடுகாயம் ஏற்பட்ட நிலையில் அவர்உடனடியாகயாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 9 நாள்கள் சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி பாலகி உயிரிழந்துள்ளாள்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

சடலம் விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-07)

## அரச ஊழியருக்குச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள இடைக்கால அராங்கத்தினால் அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளத்தை தற்போது அதிகரிக்க முடியாது.

– இவ்வாறு தகவல் மற்றும் தொடர்பாடல் மற்றும் உயர்கல்வியமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்தவண்ணமுள்ளன.

வரவு – செலவு திட்டத்தின் ஊடாகவே அது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். அரசாங்கம் என்ற ரீதியில் தற்போது வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார முன்னேற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தர முன்னேற்றம் ஆகியவற்றுக்கு தேவையான அடிப்படை விடயங்கள் குறித்தே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆட்சிமாற்றத்திற்கு அரச ஊழியர்களின் பங்களிப்பு அதிகளவு செல்வாக்கு செலுத்தின. பொதுஜன பெரமுனவின் தேர்தல் கொள்கை பிரகடனத்தில் அரச ஊழியர்கள் தொடர்பில் குறிப்பிட்ட விடயங்கள் அனைத்தும் எவ்வித மாற்றமும் இன்றி நிறைவேற்றப்படும்.

பொதுத்தேர்தலில் பொதுஜன பெரமுன பெரும்பான்மை ஆதரவுடன் ஆட்சியமைக்கும் என்பதில் எவ்வித மாற்று கருத்துக்களும் கிடையாது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

## காருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார் ஒன்றும் ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் பணமும் விழுந்துள்ளன எனவும், அது தொடர்பிலான மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள கீழுள்ள மின்னஞ்சல் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறும் குறுஞ்செய்தி வந்துள்ளது.

அதனை நம்பி இந்தப் பெண் அந்த மின்னஞ்சலுடன் தொடர்பை ஏற்படுத்தியபோது சீட்டிழுப்பில் வெற்றி பெற்றுள்ளீர்கள் எனக் கூறிச் சில போலி ஆவணங்கள், கார், காரின் திறப்புப் படம் மற்றும் கட்டுக்கட்டாக ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் உள்ள புகைப்படங்களை மின்னஞ்சல் ஊடாக மர்மக் கும்பல் ஒன்று அனுப்பியுள்ளது.

அதன் பின்னர் மர்மக் கும்பலின் மின்னஞ்சலில் இருந்து முதல் கட்டமாக லண்டனில் வரி கட்டவேண்டும் என கோரி 92 ஆயிரம் ரூபாயை வங்கியில் வைப்பிலிடுமாறு கோரப்பட்டது. அதனை நம்பி இவர்கள் வங்கியில் பணத்தை வைப்பிலிட்டுள்ளனர்.

இதனை அடுத்து ஒரு கிழமை இடைவெளியின் பின்னர், திணைக்களங்களுக்கு வரி கட்ட வேண்டும் என்பது உள்ளிட்ட சில காரணங்களைக் கூறி மின்னஞ்சல்களை அனுப்பிக் கட்டம் கட்டமாக 31 லட்ச ரூபா பணத்தை அந்த மர்மக் கும்பல் கறந்துள்ளது.

இறுதியாகக் கடந்த ஒரு சில தினங்களுக்கு முன்னர் உங்களுக்கான பணப் பரிசிலும் , காரும் இலங்கைக்கு வந்து விட்டன எனவும், அதனைப் பெற்றுக் கொள்ள கொழும்பு வெள்ளவத்தைப் பகுதிக்கு வருமாறும் கூறப்பட்டுள்ளது. அதனை நம்பி அந்தக் குடும்பத்தினர் கொழும்பு சென்றுள்ளனர்.

அங்கு அவர்களைச் சந்தித்த மர்ம நபர் ஒருவர் பரிசுத் தொகையான ஸ்ரேலிங் பவுண்ட்ஸ் பணமும், காரின் திறப்பும் உள்ளது எனக் கூறி கறுப்புப் பெட்டி (சூட்கேஸ்) ஒன்றைக் கொடுத்துள்ளார்.

பெட்டியை உடனே திறந்து பார்க்காதீர்கள். இந்த பரிசுத் தொகை தொடர்பில் இலங்கை அரசுக்குத் தெரிய வந்தால் இலங்கையில் விசாரணைகளை எதிர்கொள்ள வேண்டி வரும். அத்துடன், வரியாகப் பெருந் தொகை கட்ட வேண்டிவரும். நீங்கள் வீடு செல்லுங்கள். இந்த பெட்டியின் திறப்பைத் தபால் மூலம் அனுப்பி வைக்கிறேன் எனக் கூறி அந்த மர்ம நபர் அங்கிருந்து சென்றுள்ளார்.

அதன் பின்னர் வீடு திரும்பிய இவர்கள் சில தினங்கள் கடந்த நிலையிலும், திறப்பு வராத நிலையில் மின்னஞ்சல் ஊடாக அந்த மர்ம நபர்களைத் தொடர்பு கொள்ள முயன்றபோதும் பதில் வரவில்லை. தம்மைக் கொழும்புக்கு அழைத்த தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ள முயற்சித்தபோது அந்த இலக்கம் செயலிழந்து காணப்பட்டது.

அதனை அடுத்து சந்தேகம் அடைந்தவர்கள் அந்தப் பெட்டியை உடைத்துப் பார்த்தபோது, உடைந்த கண்ணாடி போத்தல்கள், பஞ்சு, நாணயத் தாள்கள் அளவில் வெட்டப்பட்ட கடதாசித் துண்டுகள் என்பன காணப்பட்டுள்ளன. இதன்போதே அவர்கள் தாம் ஏமாந்தமையை உணர்ந்துள்ளார்கள்.

அந்தக் குடும்பத்தினர் சீட்டிழுப்புப் பரிசினை நம்பி தம்மிடம் இருந்த சேமிப்புப் பணம், நகைகள் என்பவற்றை இழந்துள்ளமையுடன் வட்டிக்குப் பெரும் தொகை பணத்தையும் வாங்கியுள்ளனர்.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் நேற்றுமுன்தினம் காங்கேசன்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் காரிய-ாலயத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த மோசடி கும்பல் பல்வேறு வங்கிக் கணக்குகள் ஊடாகவே பணத்தைப் ஏமாற்றி பெற்றுள்ளனர் எனவும், அது தொடர்பிலான விசாரணைகளைத் தாம் முன்னெடுத்து வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## கனரக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளனர்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் ஓட்டோ ஒன்றும் கனரக வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஓட்டோவில் பயணித்த விமானப் படையினர் நால்வரும் சம்பவ இடத்திலேயே நசியுண்டு உயிரிழந்துள்ளனர்.

ஓட்டோச் சாரதிக்கு நித்திரை ஏற்பட்டதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கனரக வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். வரக்காபொல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ஐ)

## நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஷவின் முன்னிலையில் பதவிப்பிரமாணம்செய்துகொண்டார்.

இந்த நிலையில், அவர், நாளை வியாழக்கிழமை தனது கடமைகளைத் தாம் பொறுப்பேற்கவுள்ளார் எனத் தெரிவித்தார். (ஐ)

## டுபாயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படங்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்தார்கள் எனத் தெரிவித்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடந்த நவம்பர் 4ஆம் திகதி ஹோட்டலில் வைத்து இந்த மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த டிசம்பர் 22ஆம் திகதி நீதிமன்றத்தில் அவர்கள் முற்படுத்தப்பட்டு, நேற்று முந்தினம் (திங்கட்கிழமை) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் நேற்று மீண்டும் வழக்கு விசாரணை இடம்பெற்றபோது, அவர்களுக்கு அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

எனினும், குறித்த பணத்தை செலுத்த வசதியில்லையென அவர்கள் குறிப்பிட்டமையை அடுத்து மூன்றரை வருடச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தூதரகப் பணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்தினம் உத்தரவிட்டது.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் கடந்த 16ஆம் திகதி மாலை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் சுவிஸ் தூதரக அதிகாரி கைது செய்யப்பட்டிருந்தார். அவரை விடுவிப்பதற்கு அனுமதி வழங்கிய பிரதம நீதிவான், அவரின் கடவுச்சீட்டை மன்றில் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன், அந்த தூதரக அதிகாரி தாம் வசிக்கும் இல்லத்தை விட்டு வேறு இடத்துக்குச் செல்வதாயின் அது குறித்து மன்றுக்கு அறிவிக்கவேண்டும் எனவும் நீதிவான் லங்கா ஜயரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக டுவிட்டரில் கருத்து பதிவிட்டுள்ள சுவிஸ் மத்திய வெளிவிவகார அமைச்சு, கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் பிணையில் விடுவிக்கப்பட்டமையை சுவிஸ் மத்திய வெளிவிவகார அமைச்சு வரவேற்பதாகத் தெரிவித்துள்ளது. (ஐ)

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோகபூர்வ முடிவுகளும் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

எனினும், கூட்டணிக் கட்சிகளுக்கு இடையிலான ஆசனப் பங்கீடுகள் தொடர்பில் சில முரண் பாடுகள் இருக்கின்றன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் புதிய அரசாங்கம் ஒன்று வந்த பின்னர் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. மாறாக, சுதந்திர தினத்தன்று தனியே சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் பாடப்படும் எனக் கூறுகின்றனர். அவ்வாறான நிலைப்பாட்டில் அரசு இருக்குமானால் தமிழ் மக்கள் அன்றைய தினத்தை தேசிய துக்க தின மாக அனுஷ்டிக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்கில் அரச, தனியார் திணைக்களங்கள், பாடசாலைகள், போக்குவரத்துச் சேவைகள் என அனைத்தும் முடங்கும். மாபெரும் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

புதிய அரசாங்கத்தின் இந்தச் செயற்பாட்டின் ஊடாக நாட்டில் வாழும் பல்லின மக்களுக்கு இடையில் பிளவுகள் ஏற்படும். தேசிய நல்லிணக்கம் வெகுவாக பாதிப்படையும். கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழில் தேசிய கீதம் பாட அனுமதிக்கப்பட்ட்து.

குறிப்பாக சுதந்திர தினத்தில் கூட தமிழில் பாடப்பட்ட்து. அப்போதும் நாம் சுதந்திர தின நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சம்பந்தன்,சுமந்திரன் ஆகியோர் மட்டுமே கலந்து கொண்டனர். ஏனைய அனைத்து தமிழ் தேசியக் கட்சியினரும் அதனைப் புறக்கணித்தனர்.

நாட்டில் ஆடசி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எவ்வித முயற்சியும் முன்னெடுக்கப்படவில்லை. இப்போது அது தொடர்பில் பேசமுடியாது, பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் என்கின்றனர். அந்தத் தேர்தல் முடிய மாகாண சபை தேர்தல் முடிந்ததும் பேசுவோம் என்பார்கள். பின்னர் அது முடிய வேறு ஒரு புதுக் காரணத்தைக் கூறுவார்கள். இவ்வாறே தீர்வுக்கான வய்ப்பைக் கடத்துவார்கள்.அரசு இவ்வாறுதான் செயற்பட போகின்றது என்றால் நாம் சர்வதேச நாடுகளுடன் எமக்கான தீர்வை நோக்கி பயணிக்க வேண்டும். பயணிப்போம்.

இந்த நாடு பௌத்த, சிங்கள நாடு என்று கூறுகின்றனர். அப்படியானால் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக மக்கள்,கிறிஸ்தவ சிங்களவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனரா?எமக்கு இந்த நாட்டில் வாழ உரிமை இல்லையா? இது மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தும்.சுதந்திர தினத்தன்று சிங்கள மொழியில்தான் நீங்கள் தேசிய கீதம் பாடுவீர்கள் எனக் கூறினால் வடக்கு,கிழக்கில் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikathir



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கொள்கைகள் கூறிப் பிரி(ந்/த்)து நிற்பதும் தமிழ்த் தேசிய விரோதச் செயற்பாடுதான்!

பழையன கழிதலும், புதியன புகுதலும் இயற்கையின் நியதி.

நில்லாது ஓடுகின்றது காலச் சக்கரம். அதில் நொடிகள் நிமிடங்களாகி, நிமிடங்கள் மணிகளாகி, மணிகள் நாள்களாகி, நாள்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி, மாதங்கள் தாண்டி வருடங்கள் நகர்கின்றன.

பத்து வருடங்கள் கழிய தசாப்தமும் கடக்கின்றது.

புதிய மிலேனியத்தின் மூன்றாவது தசாப்தத்துக்குள் நாம் இன்று நுழைந்துள்ளோம். புதிய வருடத்தினதும் தசாப்தத்தினதும் முதல் நாள் இன்று.

பேரழிவுகளும் போரழிவுகளுமாக ஈழத் தமிழர் தாயகத்துக்குக் கொடூர யுத்தத்தையும் அதனால் ஏற்பட்ட மோசமான அவலங்களையும் தந்து நம்மைத் தாண்டிச் சென்றது இந்த மிலேனியத்தின் முதலாவது தசாப்தம்.

அந்த அழிவுகள், பின்னடைவுகள், பாதிப்புகளிலிருந்து மீளவே முடியாத ஏமாற்றங்கள், அங்கலாய்ப்புகள், அவலங்களுடன் இரண்டாவது தசாப்தமும் கழிந்துள்ளது.

தமது கௌரவ வாழ்வுக்காக – நீதிக்காக – நியாயத்துக்காக – இந்த இரண்டு தசாப்தங்களிலும், இலங்கைத் தமிழர்கள் கொடுத்த விலை நினைத்துப் பார்க்க முடியாதது.

வன்முறைப் புயல்களாக வெடித்த ரண களங்களையும், கொடூரப் பெரும் சமர்களையும் எதிர்கொண்டு, ஒரு சந்ததியையே பலி கொடுத்த தமிழினம், தனது எதிர்காலம் விடியாத ஏக்கத்தில் ஆதங்கப்பட்டு, அங்கலாய்த்து நிற்கையில் மிலேனியத்தின் பின்னரான இரண்டாவது தசாப்தமும் நம்மைக் கடந்து போய்விட்டது.

புத்தாண்டில் – புதிய தசாப்தத்தில் – தமது வாழ்வு துலங்காதா என்ற ஏக்கமே இந்தப் புதுவருடப் பிறப்பில் தமிழர்களின் எதிர்பார்ப்பு எண்ணமாக நிழலாடுகின்றது.

இந்தப் பின்புலத்தில்தான் பிறக்கும் புத்தாண்டில் நடைபெறக் கூடிய இரண்டு தேர்தல்கள் குறித்து நினைவுபடுத்தியிருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம்.

வரப் போகின்ற இரு தேர்தல்களில் முதலாவது பொதுத் தேர்தல். அதை அடுத்து வரப்போவது மாகாண சபைத் தேர்தல்.

அடுத்த ஆண்டில் சித்திரை வருடப் பிறப்பை ஒட்டி நாடாளுமன்றத் தேர்தல் நடக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பின்னர் இரண்டு, மூன்று மாதங்களில் மாகாண சபைத் தேர்தல்கள் நடக்கலாம் என நம்பப்படுகின்றது.

அவற்றில் வடக்கு மாகாணசபையும், கிழக்கு மாகாண சபையும் இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை மிக முக்கியமானவை.

இந்த இரண்டு தேர்தல்களிலுமே – பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் இரண்டிலுமே – வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியத்தின் வலிமையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சுட்டிக்காட்டுகின்ற அம்சம் மெத்தச் சரியானதே.

பௌத்த, சிங்களப் பேரினவாதம் தெற்கின் தேசியத்தை வெளிப்படுத்தும் மேலாண்மைச் சத்தியாக விஸ்வரூபம் எடுத்து, மேலாதிக்கப் பூதமாகக் கிளர்ந்து நிற்கையில், தமிழர் தரப்பு குறைந்தபட்சம் தன்னைத் தற்பாதுகாத்துக் கொள்வதற்காக வேனும் தன் தமிழ்த் தேசியத்தை வெளிப்படுத்தும் விதத்தில் இந்தத் தேர்தல்களில் பிரதிபலிப்பைக் காட்டுவது காலத்தின் கட்டாயமாக நம் மீது சுமத்தப்பட்டிருக்கின்றது.

அவைத் தலைவர் சிவஞானம் சுட்டிக் காட்டும் விடயத்தை – தமிழ்த் தேசியத்தின் வலிமையை – இந்தத் தேர்தல்களில் பிரதிபலித்துக் காட்டுவது எங்ஙனம் என்பதுதான் இப்போது கேள்வியாகும்.

அவர் சுட்டுவது போல தமிழ்த் தேசியத்தின் வலிமையை இத் தேர்தல்களில் நாம் வெளிப்படுத்துவதாயின் அத்தகைய தமிழ்த் தேசிய சக்திகளாகத் தம்மை அடையாளப்படுத்தும் கட்சிகள், தரப்புகள், அணிகள், கூட்டுகள் ஒன்றுபட்டு நிற்க வேண்டும்.

ஆனால் அதற்கான சாத்தியங்கள் – வாய்ப்புகள் – சந்தர்ப்பங்கள் – இங்கு அடியோடு இல்லை என்பதுதான் மனவருத்தம் தரும் உண்மையாகும்.

தாங்கள் மட்டுமே தமிழ்த் தேசியத்தைக் கைவிடாது பற்றி நிற்கும் தரப்புகள் என்று கூறிக்கொண்டும் – காட்டிக் கொண்டும் – பிற தரப்புகளை வைது, விமர்சித்து, கண்டித்து, வசை பாடிய படி அரசியல் செய்து கொண்டிருக்கின்றன இந்தத் தரப்புகள்.

தம்மைத் தவிர பிற கட்சிகள், அணிகள், தரப்புகள் எல்லாம் தமிழ் தேசியத்துக்கும் அதன் போராட்டப் போக்கும் விரோதமானவை என்று விமர்சித்தபடி இத்தரப்புகள் தங்களுக்குள் கன்னை கட்டி, அணி பிரிந்து, முரண்பட்டு, முட்டி மோதி, பிளவுபட்டு நிற்கின்றன.

இந்தச் சூழலில் இந்த இரு தேர்தல்களிலும் தமிழ்த் தேசியத்தின் வலிமையை எப்படித் தமிழ் மக்கள் உலகுக்குக் காட்டவோ, வெளிப்படுத்தவோ முடியும் என்பதே கேள்வி.

தமிழ் தேசியத்தை வலியுறுத்துவதாகத் தங்களைப் பீற்றிக் கொள்ளும் தரப்புகள் – அல்லது கட்சிகள் – அல்லது அணிகள் – இப்படிப் பிரிந்து நிற்பதன் மூலம் உண்மையில் தாங்கள் தமிழ்த் தேசியத்துக்கு ஆப்பு வைத்து, அதனை சிறுமைப்படுத்தி, பங்கப்படுத்தி, சீரழித்து, கெடுத்து, குட்டிச் சுவராக்கி நிற்கின்றார்கள் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் பெயரால் ஐக்கியப்பட மறுத்து, கொள்கைகள், கோட்பாடுகள், இலக்குகள், செல்நெறி என்று தத்துவம் பேசியபடி, தமிழினத்தைப் பிரித்து நிற்கின்றமை உண்மையில் தமிழ்த் தேசிய விரோதச் செயற்பாடே என்பதை அத்தரப்புகள் புரிந்து கொள்ள வேண்டும்

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாக்கப்பட்டமையைக் கண்டிக்கின்றேன்

## முன்னாள் மாகாண அமைச்சர் சத்தியலிங்கம் அறிக்கை

வவுனியா, டிசெ. 31

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தாக்கப்பட்டமையைக் கண்டிக்கிறார் என முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.



வவுனியாவில் நேற்று முன் தினம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

இறுதி யுத்தத்திலும் அதற்கு முன்னரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் தீர்வொன்றைப் பெற்றுத்தருமாறு தொடர்ச்சியாக ஜனநாயக முறையில் கடந்த பல வருடங்களாக வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் போராட்டக்காரர்களில் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமையானது கண்டனத்திற்குரியது. தமது உறவுகளைத் தொலைத்து விடை தெரியாது தொடர்ச்சியாகப் போராடிவரும் இவர்களுக்கு எதிராக முதன்முறையாக இவ்வாறான தாக்குதல் நடத்தப்பட்டமையானது மக்களின் ஜனநாயக போராட்டத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

புதிய அரசு அவர்களது பங்காளிகளை வைத்து மக்களை அச்சுறுத்தும் செயற்பாட்டை மீண்டும் ஆரம்பித்துவிட்டதா எனச் சந்தேகம் கொள்ள வைக்கின்றது.

கடந்த காலங்களில் எமது கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு எதிராகவும் சில கசப்பான சம்பவங்கள் வவுனியாவில் நடந்தேறியுள்ளன. எனினும் தங்கள் பிள்ளைகளை, உறவுகளை தொலைத்தவர்கள் தமக்கான தீர்வு எதுவும் கிடைக்காமல் காலம் தாழ்த்தப்படுவதால் ஏற்பட்ட விரக்தியின் செயற்பாடாகவே அவற்றை நாங்கள் கருதினோம். மாறாக அவர்கள் மீது எமக்கு எந்தவிதமான காழ்ப்புணர்ச்சியும் கிடையாது.

அவர்களின் பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டமைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி காரணமில்லை என்பது போராட்டத்தை நடத்தியவர்களுக்கும் நன்கு தெரியும். இந்த நிலையில் புதிய அரசு பொறுப்பேற்று அதன் நடவடிக்கைகள் இந்த நாட்டில் சிறுபான்மைத் தமிழ் இனம் மேலும் திட்டமிட்டு நசுக்கப்படும் அபாயம் உள்ள நிலையில் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் இடம் பெறுவதானது அரசின் மீதும் அவர்களின் பங்காளிகள் மீதான அச்ச உணர்வை மேலும் அதிகரித்துள்ளது – என்றுள்ளது. (ஐ – 100)

# 120 தமிழ் பொலிஸாருக்கு வடக்குக்குள் இடமாற்றம்

வடக்கு மாகாணத்தில் 120 தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தற்போது கடமையாற்றும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பிரிவிலிருந்து மாகாணத்துக்குள் வேறு பிரிவுகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் தெரிவித்தது.

வடக்கு மாகாணத்திலிருந்து தென் மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபரால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மணல் கொள்ளை, போதைப்பொருள் கடத்தல், வாள் வெட்டு வன்முறை உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுவோருடன் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தொடர்பு உண்டு என்று மூத்த சட்டத்தரணி மு.றெமிடியஸ் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருந்தார்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் கூட்டப்பட்ட கூட்டத்திலேயே பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் அமைச்சரின் கட்சியைச் சேர்ந்த மூத்த சட்டத்தரணி இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையிலேயே தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவதாக நம்பப்படுகிறது.

வடக்கு மாகாணத்தில் ஒரே மாவட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு மேலாக பணியாற்றி இந்த ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இந்த இடமாற்றத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உரிய தரப்புகளிடம் மேன்முறையீடு செய்துள்ளனர்.

மேலும் மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடமாற்றத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

10 ஆண்டுகள் கடந்தும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லாது யாழ்ப்பாணம் உள்பட வடக்கு மாகாணத்தில் சேவையாற்றுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# தமிழ் இளைஞர்கள், யுவதிகள் பொலிஸில் இணையவேண்டும்

வடக்கு – கிழக்கு ஆகிய மாகாணங்களில் உள்ள தமிழ் இளைஞர்கள், பொலிஸ் சேவையில் இணைய முன்வர வேண்டுமென யாழ்ப்பாணா பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிகால் தல்துவ தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட 125 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர் –

தற்போது கல்வி கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் படித்து நல்ல நிலைக்கு வந்தப் பின்னர், பொலிஸ் சேவையில் இணைவதன் மூலம், தங்களுடைய பகுதி மக்களுக்கு சேவையாற்ற முடியுமெனவும் கூறினார். (ஐ)

## நாளை 02.01.2020 – வியாழக்கிழமை

நட்சத்திரம்: உத்தரட்டாதி முழுவதும்
திதி : ஸப்தமி மு.இ. 08.28 வரை

இராகுகாலம் : 02.00 – 3.30
சுப நேரம் : 08.00 – 09.30

# ரிஷாத்தைக் கைது செய்யத் தவறினால் இந்த அரசும் அதிகாரத்தை இழக்கும்!

## சிங்கள ராவய அமைப்பு கடும் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.01

முன்னைய அரசாங்கத்தைப்போல் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிடின் ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசும் அதிகாரத்தை பறிகொடுக்க வேண்டிவரும் என சிங்கள ராவய அமைப்பு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அந்த அமைப்பின் தலைவர் அக்மிமன தயாரதன் தேரர் கூறியவை வருமாறு: –

ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில், தீவிரவாதத்தை வளர்ப்பதற்கு ஆதரவளித்த பொலிஸ் அதிகாரிகள் இன்னமும் அதிகாரத்தில் இருக்கின்றார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

தவறிழைத்தவர்கள் இன்னமும் சிறையில் இருக்கின்றார்கள். எனினும் தவறை செய்ய உத்தரவிட்டவர்கள் இன்னும் வெளியில் இருக்கின்றார்கள்.

இவை இரண்டுமே தவறுதான். ஆகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடைய முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட வேண்டும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை நடத்திய, இப்ராஹிம் என்பவரின் மகன்களுக்குக் கூடுதலான அளவு செப்பை விற்பனை செய்த குற்றச்சாட்டில் ரிஷாத் கைது செய்யப்படவேண்டும்.

இந்த அரசாங்கமும் என்ன செய்கின்றது என அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களும் முன்னைய அரசாங்கத்தைப்போல் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காவிடின் அதிகாரத்தை இழக்க வேண்டியேற்படும்.

பின்னர் இது தொடர்பில் பேசிப் பிரயோசனமில்லை. அதிகாரம் இருக்கின்ற சந்தர்ப்பத்தில், அறிவும் இருக்க வேண்டும். சில தலைவர்களுக்கு அதிகாரம் கிடைத் தவுடன் மூளையில்லாமல் போகும். அதுதான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நடந்தது. அந்த நிலைக்கு இந்த அரசாங்கமும் செல்லக் கூடாது. சிரமத்திற்கு மத்தியிலேயே இந்த அரசாங்கத்தை அதிகாரத்திற்கு கொண்டு வந்தோம்.

ரிஷாத் பதியுதீன் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்படக்கூடிய ஒருநபர் அல்லர், இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததும் அவர் சிறையில் அடைக்கப்படுவார் என எதிர்பார்த்தோம்.

எனினும் அது நடைபெறவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிய அவர் ஏன் இதுவரை கைது செய்யப் படவில்லை? அவர் கைது செய்யப்படும் பட்சத்தில், அவருக்கு 300 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படுவதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது.

இதேவேளை, எதிர்க்கட்சி தலைவராக இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனுக்கு தற்போது எந்த அடிப்படையில் உத்தியோக பூர்வ இல்லம் வழங்கப்பட்டுள்ளது? – என்றார் அவர்.

## பட்டாசு கொளுத்தும்போது அவதானமாக செயற்படவும்

கொழும்பு, ஜன. 01

புத்தாண்டு காலத்த அனர்த்தங்களைத் தவிர்ப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பட்டாசுகளைப் பயன்படுத்துதல் மற்றும் வீதி, நீர் நிலைகளில் ஏற்படும் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் சிறுவர்கள் விடயத்தில் மிகுந்த கவனம் செலுத்துமாறும் அமைச்சின் இடர்முகாமைத்துவப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

## கரு ஜயசூரிய தலைமையில் ஐ.தே.க. தேர்தல் பிரச்சாரம்?

கொழும்பு, ஜன. 01

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரசாரத்துக்குத் தலைமை தாங்கும் பொறுப்பைச் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வழங்குவது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடந்த கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் ஆராயப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரத்தில் இருந்து ஒதுங்கியிருந்தால், மூத்த தலைவர் கருவின் வழி நடத்தலில் தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கலாமா என்பது ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன், நாடாளுமன்றத் தேர்தல் நெருங்குவதால் கட்சியின் ஒழுக்கம், கட்டுப்பாட்டை பேணுமாறு எம்.பிக்களிற்கு கட்சித் தலைமை அறிவுறுத்தியுள்ளது.

## படைகளின் பதில் பிரதானியாக லெப். ஜெனரல் சவேந்திர சில்வா



கொழும்பு, ஜன. 01

பாதுகாப்பு படைகளின் பதில் பிரதானியாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நேற்றுடன் சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் 22ஆம் திகதி இவர் பாதுகாப்பு படைகளின் பிரதானியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவருக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு ஆண்டு சேவை நீடிப்பு 2019 ஒகஸ்ட் 22ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த நிலையில், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, டிசெம்பர் 31 வரை சேவை நீடிப்பு வழங்கியிருந்தார்.

முன்னதாக, அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, 2015 தொடக்கம் 2017 வரை சிறிலங்கா கடற்படைத் தளபதியாக பணியாற்றியிருந்தார்.

இந்த இந்த நிலையில் பாதுகாப்புப் படைகளின் பதில் பிரதானியாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இராணுவத் தளபதிக்கு மேலதிகமாக இந்தப் பதவி அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2016 தமிழில் தேசிய கீதம் பாடியமை அரசமைப்பை முற்றாக மீறும் செயல்

### கம்மன்பில காட்டம்



கொழும்பு, ஜன. 01

ஐக்கிய தேசியக் கட்சி அரசு 2016ஆம் ஆண்டு சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதத்தைப் பாடியமை அரசமைப்பை மீறும் செயல் என்று பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமய தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் தேசிய கீதம் எதுவென்பது பற்றி அரசமைப்பின் 7ஆம் சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசின் தேசிய கீதம் 'ஸ்ரீலங்கா மாதா' என்றே காணப்படுகின்றது. இதனை போன்றல்லாமல் வேறொரு விதத்தில் தேசிய கீதம் பாடப்படுமாக இருந்தால் அது அரசமைப்பை மீறும் செயலாகும்.

இந்த சரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமானால் அது தொடர்பாகவும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய ஏதேனுமொரு விடயம் தொடர்பான சரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதாக இருந்தால் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

ஆனால் தேசிய கீதம் தொடர்பான சரத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களின் நிலைப்பாட்டையும் அறிந்தகொள்ள வேண்டியது அவசியமாகும்.

எம்.நல்லதம்பி என்பவர் 1949 ஆம் ஆண்டு 'ஸ்ரீலங்கா மாதா' என்ற பாடலை தமிழில் மொழி பெயர்த்தார்.

ஆனால் 1952ஆம் ஆண்டே அந்த பாடல் தேசிய கீதமாக பிரகடனப்படுத்தப்படுகிறது. 1949 ஆம் ஆண்டு முதல் தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டாலும் பாடப்பட்டாவிட்டாலும் யாருக்கும் எவ்வித பிரச்சினையும் ஏற்படவில்லை.

ஆனால் 2016ஆம் ஆண்டு சுதந்திர தினத்தில் தமிழ் மொழியில் தேசிய கீதத்தை பாடி ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இல்லாத பிரச்சினையை உருவாக்கி விட்டிருப்பது மாத்திரமின்றி அரசமைப்பையும் மீறியிருக்கிறது – என்றார். (ஐ)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
Western Union WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயனைப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka.Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com



## புதுடெல்லியில் 119 வருடங்களின் பின்னர் ஆகக் குறைந்த வெப்பநிலை திங்களன்று!

புதுடெல்லி,ஜன.01

நேற்று முன்தினம் திங்கட்கிழமையன்று 119 ஆண்டுகளில் இல்லாத அளவு – இதுவரை கண்டிராத – குளிர் இந்தியத் தலைநகரில் இருந்தது.

இரண்டு வாரங்களுக்கும் மேலாக கடுமையான குளிரால் பாதிக்கப்பட்ட டெல்லி மக்களுக்கு நேற்று முன்தினம் மேலும் கடுமையான வானிலை அதிர்ச்சி ஏற்பட்டது. அதிகபட்ச வெப்பநிலை வெறும் 9.4 டிகிரி செல்ஸியசாகக் குறைந்தது. இது 119 ஆண்டுகளில் தலைநகரில் இதுவரை கண்டிராத குளிராக இருந்தது.

டெல்லியின் வடக்கு சமவெளிகளின் பிற பகுதிகளையும் நேற்று சூழ்ந்திருந்த பனி மூட்டத்தின் அடர்த்தியான போர்வை சூரிய ஒளியை நிலத்தை அடைவதைத் தடுத்தது. இப்பகுதி ஏற்கனவே கடுமையான குளிர்ந்த சூழ்நிலையில் தத்தளித்த நிலையில், காற்றின் திசையில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக மூடுபனி அதிகமாக இருப்பதால் நாள் வெப்பநிலை முன்னோடியில்லாத அளவிற்கு குறைந்து காணப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் 650 க்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாயின. 40 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

வடமேற்கு டெல்லியில் உள்ள முங்கேஷ்பூரில் 7.7 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையாக இருந்தது. அதே நேரத்தில் நஜாப்கர் மற்றும் ஜாபர்பூர் 8.2 டிகிரி செல்சியஸாக இருந்தது.

நேற்று சஃப்தர்ஜங்கில் குறைந்தபட்ச வெப்பநிலை 9.4 டிகிரி செல்சியஸ் 1901 ஆம் ஆண்டை அடுத்து சஃப்தர்ஜங் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட மிகக் குறைந்த நாள் வெப்பநிலை இதுவாகும்.

முந்தைய மிகக் குறைந்த அதிகபட்ச வெப்பநிலை ஜனவரி 2, 2013 அன்று பதிவான 9.8 டிகிரி செல்சியஸ் ஆகும் என்று இந்திய வானிலை மைய தலைவர் ஆர்கே ஜெனமணி கூறினார்.

# முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத் இன்று பதவியேற்கிறார்



இந்தியாவின் முப்படைகளின் முதல் தலைமைத் தளபதியாக, ஜெனரல் பிபின் ராவத், இன்று பதவியேற்க உள்ளார். இதையொட்டி, தேசிய போர் நினைவகத்தில், அவர் மரியாதை செலுத்தினார். பிபின் ராவத்துக்கு, முதல் நாடாக, அமெரிக்கா வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

இராணுவம், விமானப் படை, கடற்படை ஆகிய முப்படைகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கில், முப்படைகளின் தலைமைத்தளபதி பதவி உருவாக்கப்படும் என, சுதந்திர தின உரையின்போது பிரதமர் நரேந்திர மோடி அறிவித்திருந்தார்.

இதற்கு, பாதுகாப்பு விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை கடந்த 24ஆம் திகதி ஒப்புதல் அளித்தது. இந்நிலையில், நாட்டின் முதலாவது முப்படைத் தலைமைத் தளபதியாக, இராணுவத் தலைமைத் தளபதி பிபின் ராவத்தை நியமித்து நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இராணுவத் தளபதி பொறுப்பில் இருந்து நேற்று அவர் ஓய்வு பெற இருந்த நிலையில், அதற்கு ஒருநாள் முன்னதாக புதிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்திய முப்படைகளின் தலைமை தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜெனரல் பிபின் ராவத், இன்று பதவியேற்கிறார். வருகிற 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில், மூன்று ஆண்டுகளுக்கு அவர் இப்பதவியில் இருப்பார்.

முப்படைகளின் தலைமைத் தளபதியாக உயர்ந்துள்ள பிபின் ராவத், இராணுவத்தில் இருந்து பிரியாவிடை பெறுவதை கௌரவிக்கும் விதமாக, டெல்லி சவுத் பிளாக் பகுதியில், அவருக்கு முழு ஈராணுவ மரியாதை வழங்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இந்தியா கேட் பகுதியில் உள்ள தேசிய போர் நினைவகத்திற்கு வந்த பிபின் ராவத், அங்கு, மலர் வளையம் வைத்து, மரியாதை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிபின் ராவத், இந்தியாவின் இராணுவ வலிமையை, உயர்ந்த இடத்திற்கு கொண்டுசெல்ல திட்டமிட உள்ளார் எனத் தெரிவித்தார். எல்லையில் பாகிஸ்தான் மற்றும் சீனாவிடமிருந்து சவால்களை எதிர்கொள்ள இந்திய இராணுவம் தயார் நிலையில் உள்ளதா? என்ற கேள்விக்கு பதிலளித்த பிபின் ராவத், இந்திய ராணுவம் முழுவீச்சில் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார்.

பாதுகாப்புத் துறையின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு விவகாரங்கள் துறையின் தலைவராகச் செயல்படும் முப்படைகளின் தலைமைத் தளபதி, நான்கு நட்சத்திர அந்தஸ்து பெற்ற இராணுவ ஜெனரலாக இருப்பார். ஓய்வு வயது 65 ஆக நிர்ணயிக்கப்பட்டு இருப்பதுடன், அவரது ஊதியம், மூன்று படைகளின் தலைமைத் தளபதிகளுக்கு நிகராக இருக்கும்.

இந்தியாவின் முதல் முப்படைத் தலைமை தளபதியாக பதவியேற்க உள்ள பிபின் ராவத்துக்கு அமெரிக்கா வாழ்த்துத் தெரிவித்துள்ளது. இந்தியா உடனான பரஸ்பர இராணுவ உறவுகளை மேம்படுத்த, புதிய பதவி உதவும் என அமெரிக்கா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

# டீன் ஏஜ் சர்வதேச அழகியானார் இந்தியாவின் ஆயுஷி தோலாகியா





டீன் ஏஜ் பெண்களுக்கான சர்வதேச அழகிபோட்டியில் (Miss Teen International) இந்தியாவை சேர்ந்த ஆயுஷி தோலாகியா மகுடம் சூடினார்.

டெல்லியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பங்கேற்ற 22 நாடுகளை சேர்ந்த பெண்களை பின்னுக்கு தள்ளி குஜராத்தை சேர்ந்த ஆயுஷி தோலாகியா பட்டம் வென்றார். டீன் ஏஜ் பெண்களுக்கான சர்வதேச அழகியாக தேர்வானா ஆயுஷி, இந்தியாவின் சார்பாக மகுடம் சூடியமை மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக அவர் தெரிவித்தார். கடந்த 27 ஆண்டுகளில் மிஸ் டீன் ஏஜ் சர்வதேச அழகி பட்டத்தை வென்ற முதல் ஆசியப்பெண் என்ற பெருமையையும் ஆயுஷி பெற்றார்.

## இந்தியாவின் இராணுவத் தளபதியாக முகுந் நரவானே நேற்று பொறுப்பேற்பு



இந்திய இராணுவத்தின் 28 ஆவது தலைமைத் தளபதியாக மனோஜ் முகுந்த் நரவானே நேற்றுப் பொறுப்பேற்றார்.

இராணுவ தலைமைத் தளபதியாக இருந்த பிபின் ராவத் நேற்றுடன் ஓய்வு பெறும் நிலையில், இராணுவ துணைத் தளபதியான முகுந்த் நரவானே அந்தப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

நரவானே, சீனாவுடனான இந்திய எல்லையை பாதுகாக்கும் இந்திய இராணுவத்தின் கிழக்கு படைப் பிரிவுக்கு தலைமை வகித்து வந்தார். தேசிய பாதுகாப்பு அகாடமி, இந்தியஈராணுவ அகாடமி ஆகியவற்றில் பயிற்சி முடித்த அவர், கடந்த 1980 ஆம் ஆண்டு சீக்கிய காலாட்படையில் இணைந்துதனது இராணுவப் பணியை தொடங்கினார்.

கடந்த 37 ஆண்டுகளாக இராணுவ பணியில் இருக்கும் நரவானே, ஜம்மு – காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் கிளர்ச்சியை கட்டுப்படுத்துவது, அமைதி நடவடிக்கைகள் மேற்கொள்வதில் சிறப்பாகப் பணியாற்றினார்.

ஜம்மு – காஷ்மீரில் ராஷ்ட்ரீய ரைஃபிள்ஸ் படைப் பிரிவு மற்றும் காலாட் படையின் தளபதியாக அவர் இருந்துள்ளார்.

# அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்வு

மும்பை,ஜன.01

அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா மற்றும் சீனா இடையேயான வர்த்தக ஒப்பந்தத்தில் காணப்படும் சாதக நிலை, சர்வதேச சந்தையில் அமெரிக்க டொலரின் மதிப்பு பலவீனம் அடைந்தமை ஆகியவற்றால் அமெரிக்க டொலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உயர்வடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது . நேற்று மட்டும் அந்தப் பெறுமதி 8 பைசாக்கள் உயர்ந்து ரூ.71.23 ஆக உள்ளது.

எனினும் மும்பை பங்கு சந்தையில் நேற்றுக் காலை வர்த்தகம் தொடங்கியபொழுது சென்செக்ஸ் குறியீடு 108.21 புள்ளிகள் சரிவடைந்து 41,449.79 ஆக இருந்தது. இதேபோன்று தேசிய பங்கு சந்தையில் நிப்டி குறியீடு 28.10 புள்ளிகள் சரிந்து 12,227.75 புள்ளிகளாகக் காணப்பட்டது.



ஆண்டு நிறைவில் விடுமுறை வந்துள்ள நிலையில், சந்தைகளில் வர்த்தகம் தேக்கமடைந்து உள்ளது. இது உலகளவில் வர்த்தகத்தில் எதிரொலித்து உள்ளது.

# வடகொரியாவின் பாதுகாப்பை உறுதி செய்ய தாக்குதல் நடவடிக்கைகள் அவசியமானவை!

## இப்படிக் கூறுகின்றார் அந்நாட்டு தலைவர் கிம் ஜாங் அன்



பியாங்யாங்,ஜன.01

வடகொரியாவின் பாதுகாப்பை உறுதி செய்ய தாக்குதல் நடவடிக்கைகள் அவசியம் என்று அந்நாட்டுத் தலைவர் கிம் ஜாங் அன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா-வடகொரியா இடையிலான அணுஆயுத பேச்சு நிறுத்தப்பட்டு உள்ளது. இதனால் வடகொரியா தொடர்ச்சியாகக் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் அணுஆயுதங்களை சோதித்து வருகிறது. இதன் காரணமாக இருநாடுகளுக்கு இடையிலான உறவில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.


இந்த நிலையில் நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வது தொடர்பாகக் கட்சியின் மூத்த அதிகாரிகளுடன் வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் ஆலோசனை நடத்தினார். எந்த விதத் திட்டமிடலும் இல்லாமல் கிம் ஜாங் அன்னின் உத்தரவின் பேரில் திடீரென நடந்த ஆலோசனைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை தொடங்கி திங்கள் வரைத் தொடர்ந்ததாக அந்த நாட்டு அரசு ஊடகம் செய்தி வெளியிட்டு உள்ளது.

இந்தக் கூட்டத்தில், வெளியுறவு விவகாரங்கள், பாதுகாப்பு படைகள் போன்றவற்றின் நடவடிக்கைகள் குறித்துத் தீவிரமாக விவாதிக்கப்பட்டதாகவும், நாட்டின் பாதுகாப்பையும் இறையாண்மையையும் உறுதிப்படுத்துவதற்கு நேர்மறையான மற்றும் தாக்குதல் நடவடிக்கைகள் அவசியம் என்பதை கிம் ஜாங் அன் வலியுறுத்தினார் எனவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும் புத்தாண்டு உரையின்போது நாட்டின் பாதுகாப்பு மற்றும் அணுஆயுத விவகாரம் தொடர்பாக கிம் ஜாங் அன் முக்கிய அறிவிப்பை வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது. அணுஆயுதங்களை முழுமையாக கைவிடுவது தொடர்பான பல முக்கிய அறிவிப்புகளை கிம் ஜாங் அன் முந்தைய புத்தாண்டு உரைகளின்போது வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிஸான் நிறுவன முன்னாள் தலைவர் ஜப்பானில் காவலிலிருந்து தப்பினார்

நிதி முறைகேடு வழக்கில் சிக்கி, ஜப்பானில் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிஸான் கார் நிறுவன முன்னாள் தலைவர் கார்லோஸ் கோன் (Carlos Ghosn) லெபனானுக்குத் தப்பிச் சென்று விட்டார் எனத் தகவல் கிடைத்துள்ளது.



நிஸான் மோட்டார் மற்றும் ரெனால்ட் கார் நிறுவனத்தின் தலைவராக இருபது ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தவர் கார்லோஸ் கோன். நிஸான் பங்குதாரர்களிடம் தவறான தகவல் அளித்து அவர் ஆயிரம் கோடி ரூபா (இந்தியப் பணப் பெறுமதி அளவிற்கு மோசடி செய்தார் என்ற வழக்கில் கைது செய்யப்பட்ட அவரைப் பிணையில் விடுவித்த ஜப்பான் நீதிமன்றம், கடந்த ஏப்ரல் மாதம் முதல் அவரை வீட்டுக் காவலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த வழக்கில் அவருக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் அவர் துருக்கி வழியாக லெபனான் தலைநகர் பெய்ரூட்டுக்குத் தப்பிச் சென்று விட்டார் எனக் கார்லோஸ் கோனுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. லெபனானில் அவருக்கு குடியுரிமை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# செல்போன்களைத் தவிர்த்துவிட்டு குடும்பத்தினருடன் உரையாடுங்கள்!

## போப் ஆண்டவர் பிரான்சிஸ் அறிவுரை



வாடிகன் சிட்டி,ஜன.01

செல்போன்களைத் தவிர்த்துவிட்டு குடும்பத்தினருடன் உரையாடுங்கள் என போப் ஆண்டவர் பிரான்சிஸ் அறிவுரை கூறியுள்ளார்.

உலகம் முழுவதும் 'ஸ்மார்ட் போன்' பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து கொண்டே இருக்கிறது. ஒரு காலத்தில் ஆடம்பரப் பொருளாகப் பார்க்கப்பட்டு வந்த செல்போன் தற்போது மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகி விட்டது. அதிலும் குறிப்பாக இளசுகளுக்கு செல்போன் அவர்களின் ஆறாம் விரலாகவே மாறிவிட்டது. தூங்கும் நேரத்தை தவிர கிட்டத்தட்ட நாள் முழுவதும் செல்போனில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

அப்படி செல்போன்களுக்கு அடிமையானவர்களுக்கு போப் ஆண்டவர் பிரான்சிஸ் அறிவுரை வழங்கி உள்ளார். உங்கள் செல்போன்களைத் தூர வைத்துவிட்டு குடும்பத்துடன் அமர்ந்து உரையாடுங்கள் என அவர் கூறினார். ஏசு கிறிஸ்து, மேரி, ஜோசப் ஆகியோரை மேற்கோள்காட்டி அவர்கள் உரையாடினார்கள், உழைத்தார்கள், வழிபட்டார்கள் அதையே நீங்களும் செய்யுங்கள் என போப் பிரான்சிஸ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், நாம் குறைந்தபட்சம் உணவு மேஜையில் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணும்போதாவது செல்போன்களில் மூழ்காமல் குடும்பத்துடன் உரையாட வேண்டும்.

பெற்றோரே, குழந்தைகளே, சகோதர, சகோதரிகளே இந்தப் புனிதமான பணியை இன்றே நாம் தொடங்குவோம் என்றார்.

# ஆஸியில் காட்டுத் தீ காரணமாக சில பகுதிகளில் புத்தாண்டுக்குப் பட்டாசுகள் வெடிப்பதற்குத் தடை

## ஆனால் சிட்னியில் தடை இல்லை என்ற அறிவிப்பால் சர்ச்சை

சிட்னி,ஜன.01

ஆஸ்திரேலியாவில் காட்டுத்தீ பரவுவதை தடுக்கும் நடவடிக்கையாக, புத்தாண்டையொட்டி அங்கு பட்டாசு வெடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் தென்கிழக்கு மாகாணங்களான விக்டோரியா, நியூ சவுத் வேல்ஸ் மற்றும் தாஸ்மானியாவில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது. ஏற்கனவே இந்த காட்டுத் தீயில் பல லட்சம் ஹெக்டேர் அளவிலான நிலப்பரப்பு எரிந்து நாசமாகி விட்டது. இந்த காட்டுத்தீக்கு இதுவரை 9 பேர் பலியாகி இருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஆஸ்திரேலியாவின் அனைத்து மாகாணங்களிலும் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அங்கு 40 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெயில் கொளுத்துகிறது. இதன்காரணமாக மேற்கூறிய 3 மாகாணங்களிலும் காட்டுத்தீ மிகவும் மோசமடைந்து வருகிறது. குறிப்பாக விக்டோரியா மாகாணத்தில் காற்றின் வேகமும் அதிகமாக இருப்பதால் காட்டுத்தீ மளமளவென பரவி வருகிறது.

அங்குள்ள புகழ்பெற்ற சுற்றுலா பிராந்தியமான கிழக்கு கிப்ஸ்லேண்டில் இருந்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான குடியிருப்புவாசிகள் மற்றும் சுற்றுலா பயணிகளை பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற அரசு உத்தரவிட்டு உள்ளது. ஆனால் பிராந்தியத்தின் முக்கிய சாலைகளையொட்டி காட்டுத்தீ பற்றி எரிந்து வருவதால் மக்கள் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறுவதில் சிக்கல் நீடிக்கிறது.

இதற்கிடையே காட்டுத்தீ பரவுவதை தடுக்கும் வகையில் தலைநகர் கான்பெர்ரா மற்றும் சில முக்கிய பிராந்தியங்களில்



புத்தாண்டையொட்டி வாணவேடிக்கைகள் மற்றும் பட்டாசுகள் வெடிக்க தடைவிதிக்கப்பட்டு உள்ளது. ஆனால் காட்டுத்தீயால் மோசமாக பாதிக்கப்பட்டு உள்ள நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தின் தலைநகர் சிட்னியில் வாணவேடிக்கைகளுக்கு தடையில்லை என அந்த மாகாண அரசு அறிவித்துள்ளது. இது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

# பற்றியெரியும் புதர்த்தீயால் செந்நிறமாக மாறிய வானம்

## அஸியில் சில இடங்களில் நிலைமை மோசம்



ஆஸ்திரேலியாவில் பற்றி எரியும் புதர்த் தீயின் காரணமாக கடற்கரையோர சுற்றுலா நகரங்களில் வான்வெளி சிவப்பு நிறமாக மாறியுள்ளது.

நியூசவுத்வேல்ஸ், விக்டோரியா உள்ளிட்ட மாகாணங்களில் புதர்த் தீக்கு லட்சக்கணக்கான ஹெக்டேர் நிலங்கள், ஏராளமான வீடுகள் தீக்கிரையாயின. இந்நிலையில் விக்டோரியா கடற்கரையோர சுற்றுலா நகரமான மல்லகூட்டா (Mallacoota) நகருக்கு வரும் மற்றும் வெளியேறும் சாலைகள் புதர்த் தீயால் துண்டிக்கப்பட்டுள்ளன.

வானம் செந்நிறமாக மாறி, வளிமண்டலத்தில் சாம்பல் தூசி பரவியுள்ளது. இதனால் சுற்றுலா பயணிகளும் மக்களும் தீயின் வெப்பம் மற்றும் மூச்சுத் திணறலில் இருந்து தப்ப துறைமுகப் பகுதி, கடலில் நிற்கும் சிறு படகுகள் மற்றும் பொதுக்கட்டடங்கள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவற்றில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

# காணாமல் போனோரின் உறவுகளின் வாழ்வாதாரம் விரைவில் கட்டியெழுப்பப்படும் என டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம்,ஜன.01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அவர்கள் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைளை ஆராய்ந்து, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசி பரிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன் மிக விரைவில் அக்குடும்பங்களின் வாழ்வாதார நிலையும் கட்டியெழுப்பப்படும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடல்தொழில் மற்றும் நீரியல் வள மூலங்கள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றையதினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நுற்றுக்கும் மேற்பட்ட உறவினர்கள் சந்தித்து அவர்களது உணர்வுகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பில் தெரிப்படுத்தியிருந்தனர்.

உறவுகளின் வலிகளைக் கேட்டறிந்த பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் அவர் தெரிவிக்கையில் –

நாட்டில் நடைபெற்ற அழிவு யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பலரின் நிலைமைகள் தொடர்பில் உண்மை நிலை கண்டறியப்படாதுள்ளது. அதுமட்டுமல்லாது கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அவர்களது உறவுகள் வீதிகளில் இறங்கிப் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த உறவுகளின் கண்ணீருக்கும் அவர்களது கோரிக்கைக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினர் முண்டுகொடுத்து வந்த நல்லாட்சி அரசு எதுவித தீர்வுகளும் பெற்றுக்கொடுக்காது தமது சுயநல அரசியலுக்காக அவர்களது உணர்வுகளையும் போராட்டத்தையும் பயன்படுத்தி வந்திருக்கின்றனர்.

கடந்த 5 வருடங்களாக நல்லாட்சி அரசை தமது சுயநலன்களுக்காக தாங்கிப்பிடித்திருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்பிரச்சினைக்கு இலகுவாகத் தீர்வுகளை கண்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீராப்பிரச்சினையாக வைத்திருக்க வேண்டும் என்றே காலத்தைக் கடத்தி வந்திருந்தனர்.

ஆனால் நாம் உறவுகளை இழந்து தவிக்கும் உறவுகளுக்கு உண்மைகளைக் கண்டறிந்து கொடுக்க வேண்டும் என்பதிலும் அதற்கான பரிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதிலும் கடந்த எமது ஆட்சியிலும் சரி, அதன் பின்னர் வந்த நல்லாட்சியிலும் சரி, தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றோம்.

காணாமல் போன உறவுகளின் உணர்வுகளை நானும் அனுபவித்தவன் என்ற ரீதியில் அவர்களுக்கான பரிகாரங்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற உணர்வு எனக்கும் இருக்கின்றது.

அந்தவகையில்தான் நான் தற்போதைய அரசின் அமைச்சர் என்ற வகையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களைத் தேடி வீதிகளில் போராடும் உறவுகளை அழைத்து அவர்களது நியாயமான கோரிக்கைகளை ஜனாதிபதி மற்றும் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு செல்ல உங்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றேன்.

அதற்கு இன்று நீங்கள் ஆதரவு தந்துள்ளமயால் நிச்சயமாக வெகு விரைவில் உங்களது எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் பரிகாரங்களை பெற்றுக் கொடுக்க நான் ஏற்பாடுகளைச் செய்வேன். – என்றார்.





# சுயநலம் கொண்ட காணாமல் போனோர் சங்கம் வேண்டாம் அமைச்சர் டக்ளஸிடம் இப்படிக் கோரிக்கை விடுக்கப்பட்டது

## ஈ.பி.டி.பி. செய்திக் குறிப்பில் விவரமாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.01

சுயநலம் கொண்டவர்களால் கையாளப்படும் காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தை நாம் நிராகரிக்கின்றோம். எமது பிள்ளைகள் இன்னும் உயிருடன் இருப்பார்கள் என நாம் நம்பவில்லை. இழந்த உறவுகளை எண்ணி வாழ்ந்து கொண்டிருக்கும் உறவுகளை பாதுகாக்க எமக்கு நிரந்தரமான வாழ்வாதாரக் கட்டமைப்பைப் பெற்றுத்தாருங்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கண்ணீர் மல்கக் கோரிக்கை விடுத்தனர்.

இத்தகவல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட உறவுகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து தமது அவல நிலைமைகள் தொடர்பில் தெரிவித்திருந்தனர். இதன்போதே அவர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் இவ்வாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில் –

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வலிகளை அரசியல்வாதிகள் தமது சுயநலத்தேவைக்காகப் பயன்படுத்துகின்றனர். இதனால்நாம்தீர்வுகளையோபரிகாரங்களையோ பெற்றுக்கொள்ளமுடியாதநிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம்.





இழந்துபோன உறவை நினைத்து நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பிள்ளைகளை, குடும்பத்தை இனியும் இழக்க விரும்பவில்லை. எமது வாழ்க்கை நிலை இன்று மிக மோசமான கட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது. சில சமயங்களில் நாம் ஒரு வேளை உணவு கூட உண்பதற்கு வழியில்லாமல் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் அமைத்து இத்தனை நாள்களாகப் போராட்டங்களை மேற்கொள்கின்றார்கள். இதில் போராட்டத்தை முன்னின்று நடத்துபவர்கள், அதை இயக்குபவர்களால் நன்மை பெற்று வருகின்றார்களே தவிர, எம்மைப்போன்ற வறியவர்களுக்கு எதனையும் பெற்றுத்தர முன்வருகின்றார்கள் இல்லை.

சுயநலம் கொண்ட சுயநலவாதிகளின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் எமக்கு வேண்டாம். அதை நாம் ஏற்கப்போவதில்லை. எமக்கு நியாயமான தீர்வு வேண்டும். உண்மை நிலை வேண்டும். காணாமல் போன எமது உறவுகளின் உண்மை நிலை என்னவென்று எமக்குத் தெரியும்.

அந்த வகையில் நாம் எஞ்சியுள்ள எமது பிள்ளைகளையும் குடும்பத்தையும் பாதுகாத்துக்கொள்ள எமக்கு நிரந்தர பரிகாரத்தை பெற்றுத்தருமாறு கோருகின்றோம். – என அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.





# கொட்டில் அமைக்க தடையால் போராட்டத்தின் பின் குழப்பம்!



கிளிநொச்சி, ஜன. 01

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கந்தசுவாமி கோவில் முன்பாகப் பிரதேச சபைக்குரிய வீதியோரக் காணியில் தற்காலிக கொட்டகை ஒன்று அமைக்கும் பணி இடம்பெற்றபோது அங்கு பெண் ஒருவரால் குழப்பநிலை உருவாகியது.

இந்நிலையில் அந்தக் காணிக்குள் பொலிஸாருடன் விரைந்த பெண் ஒருவர், அந்தக் காணி தனக்குரிய எனவும் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்கு இருப்பதாகவும் சில ஆவணங்களைக் காட்டி கொட்டகை அமைப்பதைத் தடுக்க முற்பட்டார்.

எனினும் அங்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், பிரதேச சபைத் தவிசாளரும் பொலிஸாருடன் பேசி கொட்டகை அமைக்க அனுமதி கோரினர்.

அவ்வாறு அமைக்க முடியாது விட்டால் நானும் மக்களுடன் இருப்பேன் என்று சிறிதரனும் மக்களுடன் அவ்விடத்தில் இருந்துள்ளார்.

இதன்பின் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் அமைதியாக அவ்விடத்தில் இருக்க அனுமதிக்கப்பட்டனர். (ஐ)

# சிறை ஆணையாளரை விசாரிக்க வேண்டும்!

## உதய கம்மன்பில கோரிக்கை



கொழும்பு, ஜன. 01

ராஜித சேனாரத்னவை தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற அனுமதித்த சிறைச்சாலை ஆணையாளர் மீது விசாரணை நடத்தவேண்டுமென தெரிவித்துள்ளார் பிவித்ரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில.

கொழும்பில் கட்சி தலைமையகத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டால் அவர் தொடர்பான அனைத்து பொறுப்புக்களையும் சிறைச்சாலை ஆணையாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும். விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஒரு நபர் சிகிச்சை பெற வேண்டுமெனில் அரச வைத்தியசாலைகளிலேயே சிகிச்சை பெற வேண்டும்.

ஆனால் சட்டத்தை மீறி ராஜிதவை தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர். சிறைச்சாலை ஆணையாளர் சட்டத்தை மீறி செயற்பட்டுள்ளார். நீதியமைச்சர் இது குறித்து கேள்வியெழுப்பாவிட்டாலும், ஜனாதிபதி அல்லது பிரதமர் நிச்சயம் கேள்வியெழுப்பவேண்டும் – என்றார். (ஐ)

# கிளிநொச்சியில் குடும்பஸ்தர் திங்கள் வெட்டிப் படுகொலை!





*கிளிநொச்சி, டிசெ. 31*

*கிளிநொச்சி - மலையாளபுரம் புதுஐயன்குளத்தின் அணைக்கட்டின் கீழ் பகுதியில், வெட்டுக்காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் நேற்று முன் தினம் இரவு 11.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளது.*

*மலையாள புரத்தைச் சேர்ந்த 38 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான முனியாண்டி விக்கினேஸ்வரன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)*

# ஹெரோய்னுடன் ஒருவர் செட்டிகுளத்தில் கைது!

*வவுனியா, ஜன. 01*

*ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் போதைபொருளைப் பஸ்ஸில் கடத்திச் சென்ற நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர் என வவுனியா, செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.*

*கொழும்பிலிருந்து மன்னார் நோக்கிச் சென்ற பஸ்ஸை நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் செட்டிகுளம் நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச்சாவடியில் வழிமறித்த இராணுவம் மற்றும் பொலிஸார் அவ்விடத்தில் சோதனைகளை மேற்கொண்டபோது ஒரு கிலோ ஹெரோய்ன் போதைப் பொருளைக் கண்டுபிடித்தனர். அத்துடன் அதனை உடைமையில் வைத்திருந்த நபர் ஒருவரைக் கைது செய்தனர்.*

*இந்தச் சம்பவத்தில் பூநகரி, முழங்காவில் சேர்ந்த பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.*

*அவர் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னரே மத்திய கிழக்கு நாடொன்றில் இருந்து இலங்கை வந்ததுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*(ஐ-100)*






# ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் டாக்கா ப்ளூடூன் அணிகள் வெற்றி!

பங்களாதேஷ் பிரீமியர் லீக் ரி – 20 தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 25ஆவது லீக் போட்டியில், ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றிபெற்றுள்ளது.

டாக்கா மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணியும், சில்ஹெட் தண்டர் அணியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய சில்ஹெட் தண்டர் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 133 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமட் மிதுன் 62 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்.

ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணியின் பந்துவீச்சில், முஷ்டபிசுர் ரஹ்மான் 3 விக்கெட்டுகளையும், அரபாத் சன்னி, முகிடுல் இஸ்லாம், மொஹமட் நபி, லீவிஸ் கிரிகோரி ஆகியோர் தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 134 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணி, 17.2 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கைக் கடந்தது.

இதனால் ரங்க்பூர் ரேஞ்சர்ஸ் அணி 7 விக்கெட்டுகளால் அபார வெற்றியை பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கேமரூன் டெல்போர்ட் 63 ஓட்டங்களையும், மொஹமட் நய்ம் 38 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். சில்ஹெட் தண்டர் அணியின் பந்துவீச்சில், நவீன் உல் ஹக் 2 விக்கெட்டுகளையும், எபடொட் ஹொசைன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, பந்து வீச்சில் 3 விக்கெட்டுகளை சாய்த்த, முஷ்டபிசுர் ரஹ்மான் தெரிவுசெய்யப்பட்டார்.

டாக்கா மைதானத்தில் நடைபெற்ற இன்னொரு போட்டியில், டாக்கா ப்ளூடூன் அணியும், ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணியும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய டாக்கா ப்ளூடூன் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில், 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டமீம் இக்பால் 68 ஓட்டங்களையும், அசிப் அலி ஆட்டமிழக்காது 55 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணியின் பந்துவீச்சில், பர்ஹாட் ரீஸா 2 விக்கெட்டுகளையும், ஆந்ரே ரஸ்ஸல், சொயிப் மாலிக், ரவி பொபாரா ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 175 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய ராஜ்ஹாஹி ரோயல்ஸ் அணியால், 16.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதனால் டாக்கா ப்ளூடூன் அணி 74 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பதிவு செய்தது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அபீப் ஹொசைன் 31 ஓட்டங்களையும், நஹிதுல் இஸ்லாம் 14 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

டாக்கா ப்ளூடூன் அணியின் பந்துவீச்சில், வஹாப் ரியாஸ் 5 விக்கெட்டுகளையும், ஹசன் மொஹமுத், ரீஸ் மற்றும் சதாப் கான் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 5 விக்கெட்டுகளை சாய்த்த வஹாப் ரியாஸ் தெரிவு செய்யப்பட்டார்.

# ஆஸி அணியில் ஆர்ஸி ஷோர்ட்!

இந்தியா அணிக்கெதிரான ஒருநாள் தொடரில், ஆஸ்திரேலியா துடுப்பாட்ட வீரரான டி ஆர்ஸி ஷோர்ட் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இத்தொடரில் விளையாடுவதற்கான ஆஸ்திரேலியா அணியில் இடம்பிடித்திருந்த சீன் அபோட், காயத்தில் இருந்து விலகியுள்ள நிலையில், அவருக்கு பதிலாக டி ஆர்ஸி ஷோர்ட் அணியில் இணைந்து கொண்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் பிக்பேஷ் ரி – 20 லீக்கில் சீன் அபோட் சிட்னி சிக்சர்ஸ் அணிக்காக விளையாடி வந்தார். அவருக்கு இடுப்புப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதற்காக நான்கு வாரங்கள் ஓய்வு எடுக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனால் அபோட் இந்தியத் தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா அணியில் ஏற்கனவே மிட்செல் ஸ்டார்க், பெட் கம்மின்ஸ், ஜோஷ் ஹசில்வுட், கேன் ரிச்சர்ட்சன் ஆகிய பந்துவீச்சாளர்கள் உள்ளமையால், தற்போது துடுப்பாட்ட வீரரான டி ஆர்ஸி ஷோர்ட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி, ஜனவரி 14ஆம் திகதி மும்பையில் நடைபெறவுள்ளது.




# மெண்டிஸ், பெரேரா நீக்கம்!

இந்தியா அணிக்கெதிரான ரி – 20 தொடரில் விளையாடும் எதிர்பார்ப்பு மிக்க இலங்கை அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அணிக்கு லசித் மலிங்க அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளமையோடு, உப தலைவராக நிரோஷன் டிக்வெல்ல நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், சமீபகாலமாக ரி – 20 போட்டிகளில் சிறப்பாக விளையாடிவரும் பானுக ராஜபக்ஷ அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதுதவிர அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் ஒசேத பெர்னான்டோ ஆகியோருக்கும் அணியில் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதேவேளை முன்னணி வீரர்களான குசல் மெண்டிஸ் மற்றும் திசர பெரேரா ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். மேலும், தனஞ்சய டி சில்வாவும் நீக்கப்பட்டுள்ளார்.

லசித் மலிங்க தலைமையிலான இந்த அணியில், தனுஷ்க குணதிலக, குசல் பெரேரா, நிரோஷன் டிக்வெல்ல, பானுக ராஜபக்ஷ, அஞ்சலோ மத்தியூஸ், ஒசேத பெர்னான்டோ, தசுன் சானக்க, செஹான் ஜெயசூரிய, லக்ஷான் சந்தகென், வனிது ஹசரங்க, இசுரு உதான, லஹிரு குமார, நுவன் பிரதிப், கசுன் ரஜித ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.




பெரும்பாலும் இந்த அணியே எதிர்வரும் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ரி – 20 உலகக் கிண்ண தொரில் விளையாடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே இத்தொடருக்கான இந்தியா அணி அறிவிக்கப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஆண்டு இந்தியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி – 20 தொடரில் விளையாடுகின்றது.

இத்தொடரின் முதல் ரி – 20 போட்டி, ஜனவரி மாதம் 5ஆம் திகதி குவாஹாட்டியில் நடைபெறவுள்ளது.

# ஆஸிக்கெதிரான இறுதி டெஸ்டில் சோமர்வில் சேர்ப்பு!

ஆஸ்திரேலியா அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில், சுழற்பந்து வீச் சாளரான சோமர்வில், அணியில் சேர்க்கப்பட்டுள்ளார் என நியூஸிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

மெல்பர்னில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியின்போது நியூஸிலாந்து வேகப்பந்து வீச்சாளரான டிரென்ட் போல்டுக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் அவரை ஓய்வில் இருக்க மருத்துவக் குழு அறிவுறுத்தியுள்ளது. இதற்கமைய 35 வயது சுழற்பந்து வீச்சாளரான சோமர்வில் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சோமர்வில் கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் அறிமுகம் ஆனார். அறிமுக போட்டியிலேயே 7 விக்கெட்டுகள் வீழ்த்தி அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்தார். அதன்பின் இலங்கைக்கு எதிராக இரண்டு போட்டிகளில் விளையாடி உள்ளார்.

சிட்னி ஆடுகளம் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என்பதால் கூடுதலாக சோமர்வில்லேவை அணி நிர்வாகம் சேர்த்துள்ளது.

நியூஸிலாந்துக் கிரிக்கெட் அணி, ஆஸ்திரேலியாவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா தொடரை 2 – 0 எனக் கைப்பற்றி முன்னிலையில் உள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.



காலைக்கதிர் Kalaikathir



# 2020 ஆங்கில புத்தாண்டு 12 ராசிகளுக்குமான பலன்கள்

2020 ஆம் பிறக்கப்போகிறது. புத்தாண்டில் அனைத்து ராசிக்காரர்களுக்கும் நிறைய எதிர்பார்ப்புகள் இருக்கலாம். பிறக்கப் போகிற ஆண்டு சந்தோஷமான ஆண்டாக அமைய வேண்டுமே என்று அனைத்து ராசிக்காரர்களும் விரும்புகின்றனர். சில ராசிக்காரர்களுக்கு சங்கடங்கள், கவலைகள் சூழ்ந்திருக்கின்றன. நமக்கு விடிவுகாலம் பிறக்குமா என்று யோசிப்பீர்கள். உங்களின் கேள்விகளுக்கு இந்த புத்தாண்டு பதில் சொல்லப்போகிறது.

சனியின் சஞ்சாரம், குருவின் கோச்சார ரீதியான சஞ்சாரமும் அவர்களின் சொந்த வீடுகளில் அமைந்துள்ளதால் 12 ராசிக்காரர்களுக்கும் பலன்கள் அபரிமிதமாக கிடைக்கப் போகின்றன. உங்களுக்கு என்னென்ன நன்மைகள் நடக்கும், பரிகாரங்கள் என்னென்ன என்று பார்க்கலாம். 2020ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் சனிப்பெயர்ச்சி நிகழப்போகிறது. தனுசு ராசியில் இருந்து மகரம் ராசிக்கு சனி நகர்கிறார். அதே போல ராகு, கேது பெயர்ச்சியும் ஆண்டு இறுதியில் தனுசு ராசியில் இருந்து குரு பகவான் மகரம் ராசிக்கு சென்றடைகிறார். இந்த கிரகங்களின் இடப்பெயர்ச்சியால் மேம் முதல் மீனம் வரை 12 ராசிக்காரர்களுக்கும் பலன்களை பார்க்கலாம்.

2020ஆம் ஆண்டில் முக்கிய கிரகங்களின் சஞ்சாரத்தைப் பார்த்தால் சனிபகவான் தனுசு ராசியில் இருந்து ஆண்டின் முதலில் ஜனவரி 24ஆம் திகதி மகரம் ராசிக்கு நகர்கிறார். மிதுனத்தில் உள்ள ராகு 18.09.2020 அன்று இரவு 8.45 மணி ரிஷப ராசிக்கு நகர்கிறார். தனுசு ராசியில் உள்ள கேது விருச்சிக ராசிக்கு இடப்பெயர்ச்சி அடைகிறார். குருபகவான் தனுசு ராசியில் இருக்கிறார்.

2020 மார்ச் 30ஆம் தேதியன்று அதிசாரமாக மகரம் ராசிக்கு செல்கிறார். ஜுன் 30ஆம் தேதிவரை மகரம் ராசியில் சஞ்சரிப்பார். பின்னர் வக்ரமடைந்து தனுசு ராசிக்கு வரும் குருபக வான் நவம்பர் வரை தனுசு ராசியில் சஞ்சரிப்பார். நவம்பர் 20ஆம் திகதியன்று நேர்கதியில் மகரம் ராசிக்கு செல்கிறார். இது பொதுவான பலன்கள்தான் ஒருவரின் ஜாதகத்தில் உள்ள கிரகங்கள், நட்சத்திரங்கள் தசாபுத்தியின்படி நன்மை தீமைகள் நடைபெறும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.




## மேஷம்



செவ்வாயை ராசி அதிபதியாகக் கொண்ட மேஷம் ராசிக்காரர்களுக்கு புத்தாண்டு மேஷ ராசிக்காரர்களுக்கு அற்புதம். குருபாக்யம், விரைய ஸ்தான அதிபதி. அவர் ஒன்பதாம் வீட்டில் இருக்கிறார். அப்புறம் பத்தாம் வீட்டிற்கு வருகிறார். குருவினால் இன்பங்கள் அதிகரிக்கும். மிகப்பெரிய வெற்றி கிடைக்கும் வாழ்க்கை வசந்தமாகும்.

பணவரவு அற்புதமாக இருக்கும். பெண்களுக்கு உற்சாகமான ஆண்டு நிறைய நகைகள் வாங்குவீர்கள். மாணவர்களுக்கு இது அதி அற்புதமான ஆண்டாக அமையப்போகிறது. நன்றாகப் படித்து முடித்து அரியர்ஸ் எல்லாம் கிளியர் செய்து டிகிரி வாங்குவீர்கள். இந்த புத்தாண்டில் நீங்க அதிகமாக மஞ்சள், இளம் சந்தன நிற ஆடைகளை உபயோகிங்கள் நல்லது நடக்கும் முயற்சிகள் வெற்றி கிடைக்கும்.

உங்க தசாபுத்தியும் நன்றாக இருந்தால் உங்களக்க இது அதி அற்புதமான ஆண்டாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. ஆலய தரிசனம் அற்புத பலன்களை தரும் சொர்ண சனீஸ்வரரை வணங்குங்கள் சங்கடங்கள் தீரும்.

## ரிஷபம்



சுக்கிரனை ராசி அதிபதியாகக்கொண்ட ரிஷப ராசிக்காரர்களுக்கு நிறைய லாபம் வரும். ஆனாலும் கடும் போராட்டம் இருக்கும். நீண்ட நாளாகத் தடை பட்டிருந்த காரியங்கள் தடைகள் நீங்கி, வெற்றி கிடைக்கும். மகிழ்ச்சியும் சந்தோஷமும் அதிகரிக்கும். ஆடை ஆபரணங்கள் அதிகம் வாங்குவீங்க. நிறைய சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள். வெற்றி மேல வெற்றி வந்து உங்களைத் திக்குமுக்காட வைக்கும்.

மாணவர்களுக்கு மகிழ்ச்சியான ஆண்டாக அமையும். வியாபாரம், தொழிலில் லாபம் வரும் புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ரிஷபம் ராசிக்காரர்கள் கறுப்பு, நீலம் ஆடைகளை அதிகம் பயன்படுத்துங்கள் நன்மை.

குரு தட்சிணா மூர்த்தியை குரு ஹோரையில் தரிசனம் பண்ணுங்க நல்லதே நடக்கும்.

## மிதுனம்



புதனை ராசி அதிபதியாகக் கொண்ட மிதுனம்ராசிக்காரர்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் எட்டில் சனி, ஏழில் குரு இருந்தாலும் சந்தோஷமான ஆண்டாக அமைகிறது. காரணம் குருவின் சஞ்சாரம், பார்வையினால் பொன்னான ஆண்டாக அமைகிறது. ரொம்ப சிறப்பான ஆண்டு. பெண்களுக்கு சொந்த வீடு கிடைக்கும். தம்பதியர் இடையே நெருக்கம் ஏற்படும். மாணவர்களுக்கு அற்புதமான ஆண்டு நன்றாக படிப்பீர்கள். தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு பட்டங்கள் பதவிகள் தேடி வரும்.

நிறைய சொத்து சேர்க்கை ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்கள். ஆரோக்கியம் அதிகரிக்க தன்வந்திரி பகவானை வணங்குங்கள். நல்லதே நடக்கும்.

## கடகம்



சந்திரனை அதிபதியாகக் கொண்ட கடக ராசிக்காரர்களுக்கு உங்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் ஆறாம் வீட்டில் குரு சஞ்சரிக்கிறார். அப்புறம் ஏழாம் வீட்டிற்கு அதிசாரமாக சென்று பின்னர் வக்ரமடைந்து ஆண்டின் இறுதியில் நேர்கதியில் ஏழாம் வீட்டில் அமர்கிறார். சில மாதங்கள் குருவின் பார்வை உங்க ராசிக்குக் கிடைக்கும். குரு பகவானால் சில தீமைகள் ஏற்பட்டாலும் அதிகமான அளவில் அற்புதமான வெற்றிகளை தருவார். சனிபகவான் ஏழில் அமர்கிறார். குடும்பத்தில் ஒற்றுமை ஏற்படும்.

மாணவர்களுக்கு பெற்றோர்களின் அனுசரணை கிடைக்கும். வியாபாரிகளுக்கு ரொம்ப லாபமான வாரம். அற்புதமான ஆண்டாக அமைகிறது. தொழில் வியாபாரிகளுக்கு ஆரம்பத்தில் அற்புதமாக இருக்கும். ஆண்டு மத்தியில் சில தடைகள் ஏற்பட்டாலும் ஆண்டில் இறுதியில் தடைகளை தாண்டி முன்னேற்றம் ஏற்படும். வயலட் நிற ஆடைகளை அதிகம் அணியுங்கள் நல்லதே நடக்கும். பௌர்ணமி பூஜை செய்யுங்கள் மன கலக்கங்கள் நீங்கி சந்தோஷம் அதிகமாகும்

## சிம்மம்



சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்மராசிக்காரர்களே, 2020 ஆம் ஆண்டு உங்களுக்கு குதூகலம் நிறைந்த ஆண்டாக அமைகிறது. உங்க ராசிக்கு ஆறாம் வீட் டில் சனிபகவானும் பஞ்சம ஸ்தானத்தில் குரு பகவானும் சஞ்சரிப்பதால் உங்க வாழ்க்கை உயர் நிலையை அடையும். இந்த ஆண்டு உங்களுக்கு சின்ன சின்ன நோய்கள் எட்டிப் பார்த்தாலும் உங்களுக்கு பெரிய அளவில் செலவுகளோ பாதிப்புகளோ வராது.

கவ லைப்பட வேண்டாம். பிள்ளைகளால் உங்களுக்கு அதிகம் நன்மைகள் நடக்கும்.

வயதானவர்கள் உடல் ஆரோக்கியத்தில அக்கறை காட்டுங்கள். வேலை செய்பவர்கள் குடும்பத்தோடு உல்லாச பயணம் செல்வீர்கள், பண வரவு அபரிமிதமாக இருக்கும். சொந்த பந்தங்களுடன் இருந்த பகை நீங்கும். உங்களுக்கு எதிரிகள் தொல்லை ஒழியும். இந்த ஆண்டு அதிக அளவில் மஞ்சள், நீல நிற ஆடைகளை அணியுங்கள். தினசரி சூரிய நமஸ்காரம் பண்ணுங்க மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

## கன்னி



2020ஆம் ஆண்டு மேன்மையான ஆண்டாக அமைகிறது. நீண்ட நாள் கனவு நனவாகும். உங்க திட்டங்களை செயல்படுத்துவீர்கள். காரணம் அர்தாஷ்டம சனி இடம் மாறி ஐந்தாம் வீட்டிற்கு செல்வது சிறப்பு. குருவும் உங்களுக்கு சாதகமாக சஞ்சரிக்கிறார். பெண்களுக்குக் கணவர் மூலம் பரிசுகள் கிடைக்கும்.

உங்க அன்புக்கு உரியவர் இந்த ஆண்டு உங்களுக்கு நிறைய ஆச்சிரயம் கொடுப்பார். நகைகள், ஆடைகள் வாங்குவீர்கள். இளம் பெண்கள் சிலர் கணவர் உதவியால் தொழில் முனைவோர்களாக மாறுவீர்கள். நினைத்தது அதிகம் நிறைவேறும் மாணவர்களுக்கு அற்புதமான ஆண்டு. படித்து முடித்து கல்லூரிகளில் இருந்து வெற்றிகரமாக வெளியேறுவீர்கள். சிலருக்கு உயர்கல்வி யோகம் அமையும். மஞ்சள், பச்சை அதிர்ஷ்ட நிறங்கள். புதன்கிழமை பெருமாள் கோவிலுக்கு போய் துளசி மாலை போட்டு வழிபடுங்கள் நன்மைகள் நிறைய நடக்கும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் தேசியத்தின் வலிமையை வெளிப்படுத்த பிறக்கும் புத்தாண்டில் இரண்டு தேர்தல்கள்

## வாழ்த்துச் செய்தியில் சி.வீ.கே.சிவஞானம் தெரிவிப்பு



இன்று பிறக்கும் புத்தாண்டில் இரண்டு தேர்தல்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்.

அந்த இரண்டு தேர்தல்களிலும் தமிழ் தேசியத்தின் வலிமையை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது.

– இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்திருக்கின்றார் வடக்கு மாகாணசபை அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம். அவர் தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு: –

கடந்த வருடம் தமிழ் மக்களை பொறுத்த வரையில் ஒரு முன்னேற்றகரமான நிலையை எட்ட முடியாத ஒரு ஆண்டாக 2019 ஆம் ஆண்டு கழிந்து செல்கின்றது.

எவ்வாறாயினும் இரண்டு தேர்தல்களை சந்திக்க வேண்டிய ஆண்டாக 2020ஆம் ஆண்டு காணப்படுகின்றது. அந்த இரண்டு தேர்தல்களிலும் தமிழ் தேசியத்தின் வலிமையை வெளிப்படுத்த வேண்டிய தேவை இருக்கின்றது. அவ்வாறான ஒரு வலிமையுடான பலத்துடன் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் பேசக் கூடிய சூழ்நிலை உருவாகவேண்டும்.

அவ்வாறு பேசக்கூடிய சூழ்நிலையில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இலங்கை அரசாங்கத்துடனும் உலகநாடுகளின் ஒத்துழைப்புடன் ஒரு முன்னேற்ற காரணமான நிலையை தமிழ் மக்கள் எட்டக் கூடிய ஆண்டாக 2020 ஆம் ஆண்டு மலரவேண்டும்.

எங்களுடைய அனைத்து மக்களுக்கும் சுபீட்சமான மகிழ்சியான ஒரு ஆண்டாக 2020 ஆம் ஆண்டு அமையவேண்டும் என இறைவனை பிரார்த்தித்து வாழ்த்த விரும்புகின்றேன்.

அத்துடன் எங்களுடைய நிலவிடுவிப்பு,அரசியல் கைதிகள்விடுதலை,காணமல் ஆக்கப்பட்டோர் பிரச்சனைக்கும் சாதகமான விடிவு கிடைக்க வேண்டும் என்று இறைவனைப்பிரார்த்திக்கிறேன்.

# 2020 ஆங்கில புத்தாண்டு 12 ராசிகளுக்குமான பலன்கள்



## துலாம்

சுக்கிரனை அதிபதியாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களுக்கு லாபகரமான ஆண்டாக அமையும். பங்கு சந்தை, ரேஸ், லாட்டரி மூலம் பண வருமானம் அதிகம் வரும் மன உற்சாகத்தோடு இருப்பீங்கள்.

மாணவர்களுக்கு முன்னேற்றகரமான ஆண்டு. பெண்களுக்கு உற்சாகமான ஆண்டு கணவர் உங்களுக்காக நிறைய செலவு செய்வார். தம்பதியரின் ஒற்றுமை சந்தோஷத்தை அதிகரிக்கும். குருவின் பார்வை லாப ஸ்தானத்தில் விழுவதால் தொழிலில் லாபம் அதிகரிக்கும், சனியின் பார்வை உங்க ராசியின் மீது விழுவதால் ஆண்டு முழுவதும் திடீர் அதிர்ஷ்டங்கள் கிடைக்கும். நீங்க அதிகம் இந்த ஆண்டு இளம் பச்சை, வெண்மை நிற ஆடைகளை அணியுங்கள் நல்லது நடக்கும். வெள்ளிக் கிழமைகளில் அம்மன் கோவிலுக்கு போய் சுக்கிர ஓரையில் நெய் தீபம் ஏற்றி வழிபடுங்கள் நல்லதே நடக்கும்.



## விருச்சிகம்

செவ்வாய் பகவானை அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே, இந்த 2020ஆம் ஆண்டு உங்களுக்கு புத்துணர்ச்சி தரக்கூடிய ஆண்டாக அமையப்போகிறது. இத்தனை ஆண்டுகளாக சிக்கல்களை சந்தித்து கடுமையான சவால்களுடன் வாழ்க்கையை ஓட்டி வந்தீர்கள். இனி உங்களுக்கு சந்தோமான ஆண்டாக பிறக்கப் போகிற புத்தாண்டு அமைகிறது. காரணம் குருபகவான் உங்க ராசிக்கு இரண்டாம் வீடான தன வாக்கு ஸ்தானத்திற்கு மாறியிருக்கிறார். குடும்பம் குதூகலமாக இருக்கும். நீண்ட நாள் கனவுகள் நிறைவேறும். பெண்களுக்கு முக்கியத்துவமான ஆண்டாக அமைகிறது. படிக்கும் மாணவர்களுக்கு வெளிநாடு போகும் யோகம் வரப்போகிறது. ஏழரை சனி முடிந்து சனிபகவான் மூன்றாம் வீட்டிற்கு நகர்வது அற்புதமான அம்சம். மொத்தத்தில் 2020ஆம் ஆண்டில் இருந்து உங்களுக்கு சங்கடங்கள் நீங்கி சந்தோஷ ங்கள் அதிகரிக்கப் போகிறது. செவ்வாய் கிழமை முருகனை வணங்கி வாருங்கள். அறுபடை வீடுதரிசனம்மனதிற்கும்உடல்ஆரோக்கியத்திற்கும் அற்புதங்களை ஏற்படுத்தும்.



## தனுசு

குரு பகவானை ராசி நாதனாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களே, 2020ஆம் ஆண்டு உங்களுக்கு வெற்றிகளும் சந்தோ–ஷங்களும் நிறைந்த ஆண்டாக அமையும்.

நீங்க நினைத்த காரியங்கள் எல்லாம் மளமளவென முடிந்து உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். திருமணம் உள்ளிட்ட சுப காரியங்கள் கை கூடி வரும் உங்க ராசியில் ஜென்ம குருவாக அமர்ந்துள்ள ராசி நாதன் குருபகவான் உங்க ராசிக்கு ஏழாம் வீட்டினை பார்க்கிறார். தொழில் வியாபாரத்தில் லாபம் பெருகும். ஏழரை சனியின் பாதிப்பு இருப்பதால் உங்க உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுங்க.

மாணவர்க ளுக்கு ஆசிரியர்களின் ஆதரவும் பெற் றோர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும்.



## மகரம்

சனிபகவானை ராசி நாதனாகக் கொண்ட மகரம் ராசிக்காரர்களுக்கு பிறக்கப் போகிற புத்தாண்டு சின்னச் சின்ன சங்கடங்களையும் சில நேரங்களில் சந்தோஷத்தையும் தரக்கூடிய ஆண்டாக அமைந்துள்ளது. ஏழரைச் சனியின் தாக்கம் ஜென்ம சனியாக தொடர்கிறது. அதோடு குருவும் விரைய குரு, ஜென்ம குரு என உங்களை சில நேரங்களில் சங்கடப்படுத்துவார்.

உங் களின் விடா முயற்சி வெற்றிகளைத் தரும். அலுவலகத்தில் வேலை செய்யும் ஆண்கள் பெண்கள் விசயத்தில் கவனமாக இருங்கள். அதே போல இளம் பெண்கள் ஆண்களிடம் எச்சரிக்கையாக இருங்கள், பெற்றோர்கள் சொல்வதை கேட்டு நடந்தால் பாதிப்பில் இருந்து தப்பிக்கலாம். படிக்கும் மாணவர்கள் கொஞ்சம் கவனமாக இருங்க, மன அழுத்தம் வர வாய்ப்பு உள்ளது. ஆலய தரிசனம் அவசியம் செய்ய வேண்டும். தொழில் வியாபாரிகள் அதிக முதலீடுகள் செய்ய வேண்டாம் தவிர்த்து விடுங்கள்.



## கும்பம்

சனி பகவானை ராசி நாதனாகக் கொண்டகும்பராசிக் காரர்களே உங்களுக்கு பிறக்கப் போகிற புத்தாண்டு அதி அற்புதமான ஆண்டாக அமையப் போகிறது. மனதிலும் உடம்பிலும் உற்சாகம் பிறக்கும். நினைத்த காரியங்கள் எல்லாம் வெற்றிகரமாக முடியும். இந்த ஆண்டு புதிய பிசினஸ் தொடங்கலாம் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். பெண்களுக்கு கணவனின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். நிறைய ஆச்சரியப் பரிசுகள் கொடுத்து அசத்துவார் உங்க கணவர். பிள்ளைகள் உங்கள் மீது பாசமழை பொழிவார்கள். இளைஞர்களின் கல்யாணக் கனவுகள் நனவாகும்.

புத்திர பாக்கியம் கிடைக்கும். மாணவர்களுக்கு சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். வெளிநாடு ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் அபரிமிதமான லாபம் கிடைக்கும். நீங்க இந்த ஆண்டு முக்கியமான விசயங்களை பேசும் போதும் நல்ல காரியங்களை செய்யும் போதும் கரும் பச்சை நிற ஆடைகளை அணியுங்கள் நன்மைகள் அதிகம் நடைபெறும்.



## மீனம்

குருபகவானை ராசி நாதனாகக் கொண்ட மீனம் ராசிக்காரர்களே இந்த ஆண்டு சனி பகவான் சஞ்சாரமும், குரு பகவான் சஞ்சாரமும் உங்களுக்கு ரொம்ப சாதகமாக இருக்கிறது. தொழிலில் லாபம் அதிகம் கிடைக்கும்.

குரு பத்தாம் வீட்டில் கேது உடன் இணைந்து நான்காம் வீட்டில் உள்ள ராகுவின் பார்வையில் இருப்பதால் நன்மைகளும், சந்தோஷங்களும் அதிகம் கிடைக்கும். மனதளவிலும் உடல் அளவிலும் தெம்பும் தைரியமும் கூடும். மிகப்பெரிய உயரங்கள் கிடைக்கும். சமூகத்திலும் சமுதாயத்திலும் அந்தஸ்து அதிகரிக்கும். படிக்கும் மாணவர்களுக்கு உற்சாகமான ஆண்டாக அமையும். தொழில் வியாபாரிகளுக்கு நன்மைகள் அதிகம் நடைபெறும். மண் நிற ஆடைகளை அதிகம் அணியுங்கள் நன்மைகள் அதிகரிக்கும்.

# தமிழர்கள் தமிழில் தேசியகீதம் பாட அனுமதிக்கப்பட வேண்டும்

## வலியுறுத்துகிறார் வாசுதேவ



வடக்கில் உள்ளவர்கள் தமிழில் தேசிய கீதம் பாடுவதை விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மட்டுமே தடுத்தார் என இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எஹலியகொட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் பேசிய அவர், தேசிய கீதத்தை தமிழ் மொழியில் பாடுவது என்பது சாதகமான நடவடிக்கை என்றும் சுட்டிக்காட்டினார்.

தமிழ் மொழியில் தேசிய கீதம் படுவது என்பது அரசமைப்பில் காணப்படுவதாகவும் மேலும் தமிழ் சமூகத்தினர் தங்களுக்கு விருப்பமான மொழியில் தேசிய கீதம் பாட ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

# தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது அதனால் சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும்

## விக்கிரமபாகுவின் நவ சமசமாஜக் கட்சி இன்றைய ஆண்டு விழாவை ஒட்டி அறிக்கை



கொழும்பு,ஜன.01

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உள்ளது என்றும், தமிழ் மக்களுக்கு சுயாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தாம் உறுதியாக இருக்கிறார் எனவும் நவ சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தலைமையிலான நவ சமசமாஜக் கட்சியின் 42ஆவது ஆண்டு விழா, இம்முறை வலிமையான ஜனநாயகத்துக்கான மாற்றம் என்ற தொனிப்பொருளில், கொழும்பு புதிய நகர மண்டபத்தில், இன்று நடைபெறவுள்ளது. இது குறித்து கட்சி வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கை வரலாற்றில், தேசிய இனங்களின் உரிமைகளுக்காகவும், தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட பிரிவினரின் உரிமைகளுக்காகவும் நவ சமசமாஜக் கட்சி அயராது உழைத்து வருகிறது.

2009ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. இதன் பின்னர், தென்னிலங்கையில் பேரினவாத சக்திகளுக்குப் பயந்து பல இடதுசாரி அமைப்புகள், தொழிற்சங்க விற்பன்னர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்திலுள்ள நியாயப்பாடுகளைக் கைகழுவிவிட்டபோதிலும், நவ சமசமாஜக் கட்சி எந்த சூழ்நிலையிலும், தனது நிலைப்பாட்டில் துளியளவும் மாறாத நிலையில் தனது பயணத்தைத் தொடர்கிறது.

நல்லாட்சி அரசாங்கத்தினூடாக, ஜனநாயக சூழ்நிலை ஒன்று துளிர்விடத் தொடங்கியது. ஆனால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினதும் திசை மாறிய செயற்பாடுகள், 2015 ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த 62 இலட்சம் மக்களின் எதிர்பார்ப்புகளைத் தவிடுபொடியாக்கியுள்ளன.

அத்துடன், தென்னிலங்கை முழுவதும் மஹிந்த ராஜபக்ஷ அணியினர் முழு அளவில், சிங்கள – பௌத்த வாக்குகளை குறிவைத்து இனவாதப் பிரசாரங்களை முன்னெடுத்தனர். இத்தகைய இனவாதப் பிரசாரங்களை முழு அளவில் முறியடிக்கக்கூடிய வியூகத்தை, ஐக்கிய தேசியக் கட்சியினர் வகுக்கவில்லை. – என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## இரண்டாயிரத்து இருபதை இன்முகமாய் வரவேற்போம் !

இரண்டாயிரத்து பத்தொன்பது எமைவிட்டு செல்கிறது
இரண்டாயிரத்து இருபது எம்மிடத்து வருகிறது
பட்டவெங்கள் துயரனைத்தும் பறந்தோடிப் போகவென்று
இஷ்டமாய் இறைவனிடம் எல்லோரும் வேண்டிடுவோம்

இனமோதல் மதமோதல் இல்லாமல் போகவென்று
எல்லோரும் மனமார இறைவனிடம் இறைஞ்சிடுவோம்
பணமுள்ளார் மனமெல்லாம் பசித்தவரை பார்ப்பதற்கு
படைத்தவனே உதவிடென பக்குவமாய் வேண்டிடுவோம்

சதைவெறியால் அலைகின்ற சண்டாளர் திருந்துதற்கு
உதவுகின்ற வழிவகையை உயர்சட்ட மாக்கிடுவோம்
தெருவழியே மதுவரக்கன் திரிகின்ற நிலையதனை
உருத்தெரியா தாக்குதற்கு ஒன்றிணைவோம் வாருங்கள்

அரக்ககுண முள்ளார்கள் அரசுகட்டில் ஏறாமல்
ஆக்குகின்ற விழிப்புணர்வை அனைவருமே பெற்றிடுவோம்
அறவாட்சி செய்திடுவார் எனவெண்ணும் ஆளுமையை
ஆராய்ந்து ஆராய்ந்து அரசுகட்டில் அமர்த்திடுவோம்

பொய்முகத்தைக் காட்டிடுதல் போலிவேசம் போட்டிடுதல்
நல்லதல்ல என்பதனை நாமுணர்தல் நலம்பயக்கும்
வல்லவராய் இருந்தாலும் நல்லவராய் இருந்திடலே
வாழ்வாங்கு வாழ்வதற்கு வழியாகும் எனமுணர்வோம்

பெற்றவரைப் பேணிடுவோம் பெரியவரை மதித்திடுவோம்
கற்றபடி நடந்திடுவோம் கசடதனை களைந்தெறிவோம்
சென்ற வருடத்தை சிந்தையின்று அகற்றிவிட்டு
இந்த வருடத்தை இன்முகமாய் வரவோற்போம்

சமயமெனும் சன்மார்க்க நெறியதனை பாழ்படுத்தும்
சதிகாரக் கும்பலினை தானொதுக்கி வைத்திடுவோம்
மனமதனில் நல்லெண்ணம் தோன்றுதற்கு வழிகாட்டும்
தலைசிறந்த பெரியோரை தானணுகி இருந்திடுவோம்

மணம்பரப்பும் மலராக மலரட்டும் புதுவருடம்
மாசெல்லாம் மனமகன்று மருளகன்று ஓடட்டும்
துணிவு மனமேறட்டும் தொண்டுமனம் நிறையட்டும்
மனமகிழ்வு கொண்டுநாம் வரவேற்போம் வாருங்கள்.

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மெல்பேண் அவுஸ்திரேலியா.

## துன்பப்படுவோருக்கு உதவிக்கரம் நீட்டுகின்ற ஆண்டாக பிறக்கும் இவ்வருடம் அமையட்டும்

### யாழ் ஆயர் தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

துன்பப்படுவோருக்கு உதவிக்கரம் நீட்டும் ஆண்டாகப் புத்தாண்டைக் கொள்வோம்.

– இவ்வாறு யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தமது 2020 புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு: –

2020ஆவது புதிய ஆண்டு மலர்ந்துள்ள வேளை எல்லோரும் இப்புதிய ஆண்டை மகிழ்வோடும் புதிய ஏக்கங்கள், எதிர்பார்ப்புக்களோடும் எதிர்பார்த்துள்ளனர்.

இப்புதிய ஆண்டில் உங்கள் அனைவரின் உள்ளத்து எண்ணங்களும் எதிர்பார்ப்புக்களும் நிறைவுபெற வேண்டுமென இறையாசி வேண்டி புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

கத்தோலிக்க திருச்சபையானது 2020ஆம் ஆண்டின் முதல் தினத்தை ஆண்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியாவின் தினமாக அறிவித்து அன்னையின் பாதுகாவலில் புத்தாண்டைத் தொடங்கி அன்னையின் வழிகாட்டலில் ஆண்டு முழுவதும் பயணிக்க எமக்கு அழைப்பு விடுக்கிறது. ஆண்டவர் இயேசுவின் தாய் அன்னை மரியா உங்கள் அனைவரையும் தாய்க்குரிய அன்புடன் 2020 ஆம் ஆண்டு முழுவதும் பாதுகாத்து வழிநடத்துவாராக.

யாழ் மறைமாவாட்டம் மலரவிருக்கும் புத்தாண்டை துயருறுவோர் ஆண்டாக பிரகடனம் செய்கின்றது. வாழ்வில் பல்வேறு நிலைகளில் துன்பப்படுகின்ற எல்லோரையும் எம் கண்முன் நிறுத்தி அவர்களுக்காகச் செபிக்கவும், அவர்களின் துன்பங்களில் உதவிக்கரம் கொடுத்து, அவர்களை தாங்கிக் கொண்டு, வாழ்வை முன்னெடுக்க முன்வர வேண்டும். சிறப்பாக காணாமல் போனோர் விடயம், அரசியல் கைதிகள் விவகாரம், மீள்குடியேற்றம், வேலையற்றோர் பிரச்சினை, போதைப்பொருள் பிரச்சினை போன்றவற்றை முன்வைத்து செயற்பட அனைவரையும் வேண்டி நிற்கின்றோம்.

மலரவிருக்கின்ற ஆண்டில் சுயநலப் போக்குகளைக் களைந்து, பகைமைகளை மறந்து, ஒருவரை ஒருவர் மன்னித்து ஏற்றுக்கொண்டு இம் மண்ணில் மனிதநேயம் மலர, மனித மாண்பு தழைக்க, மக்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடனும், நிம்மதியுடனும் உண்மையான அமைதியுடனும் வாழ எல்லோரும் ஒருமனப்பட்டு ஒத்துழைக்க முன்வர வேண்டும்.

புதிய ஆண்டில் இறைவன் எம்மை எப்போதும் பாதுகாத்து வழிநடத்துவாராக. 2020 புதிய ஆண்டு முழுவதும் இறையாசீர் என்றும் உங்களோடு இருந்து வழி நடத்த வாழ்த்துகிறோம். – என்றுள்ளது.

## புத்தாண்டில் இவை வேண்டாம்!

2020 புத்தாண்டில் காலடியை எடுத்துவைக்கப்போவதால் அனைவரும் மிகவும் உற்சாகமாக இருப்போம். ஒவ்வொரு புத்தாண்டு பிறக்கும் போதும், ஆண்டின் முதல் நாளன்று ஒருசில தீர்மானங்களை எடுக்க உலகம் முழுவதும் பலரும் மும்முரமாக இருப்பர். புத்தாண்டு நாளை சிறப்பாக கொண்டாடுவதற்கு பலவிதமான சுவாரஸ்யமான திட்டங்களை பலரும் தீட்டுவர். ஆனால் புத்தாண்டு தினத்தைக் கொண்டாடும் போது, செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை என்று மனதில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. சொல்லப்போனால் அவை மிகவும் பிரபலமான புத்தாண்டு



மூடநம்பிக்கைகள் ஆகும்.

1 – புத்தாண்டின் முதல் நாளன்று தட்டைப்பயறு மற்றும் கீரைகளை பலர் சாப்பிடுவதைப் பார்த்திருப்பீர்கள். ஏனென்றால், இவற்றை உண்பதன் மூலம் அந்த வருடத்தில் அதிர்ஷ்டம் கொட்டும் மற்றும் வீட்டின் நிதி நிலைமை மேம்படும். வீட்டின் செழிப்புக்காக கீரைகளுடன் பட்டாணி சாப்பிட வேண்டும். இதில் பட்டாணி நல்ல அதிர்ஷ்டத்தையும், கீரைகள் பணத்தையும் குறிக்கும்.



2 – புத்தாண்டு அன்று வீட்டில் உள்ள குப்பைகளையோ அல்லது உணவையோ அல்லது வேறு எந்த பொருளையோ தூக்கி எறியக்கூடாது. எதை தூக்கி எறிவதாக இருந்தாலும், புத்தாண்டு தினத்தின் முந்தைய நாள் அல்லது புத்தாண்டு தினத்தின் மறுநாள் தூக்கி எறியுங்கள். ஒருவேளை தூக்கி எறிந்தால், வீட்டில் செல்வம் நிலைத்தில்லாமல், செலவு அதிகமாக இருக்கும் என்ற ஓர் நம்பிக்கை உள்ளது.

3 – புத்தாண்டு அன்று யாரிடமும் கடன் வாங்கவோ அல்லது பணத்தைக் கொடுக்கவோ கூடாது. ஒருவேளை அவ்வாறு செய்தால், வருடம் முழுவதும் உங்கள் நிதி நிலைமை இப்படித் தான் இருக்கும். எனவே இந்நாளில் உங்கள் பர்ஸில் பணத்தை முழுமையாக நிரப்பி வைத்திருங்கள். இதனால் வருடம் முழுவதும் பணம் உங்கள் பர்ஸில் நிரம்பி இருக்கும்.





4 – புத்தாண்டு தினத்தின் போது எக்காரணம் கொண்டும் அழக் கூடாது. இதனால் அந்த வருடம் முழுவதும் மகிழ்ச்சியை இழந்து இருக்கக்கூடும். எனவே நீங்கள் வருடம் முழுவதும் சந்தோஷமாக இருக்க விரும்பினால், ஆண்டின் முதல் நாளில் அழாதீர்கள்.



5 – புத்தாண்டு அன்று துணியை துவைக்கக் கூடாது. வீட்டில் அழுக்குத் துணிகள் இருந்தால், ஜனவரி 2 ஆம் நாள் துவையுங்கள். உலகின் சில பகுதிகளில் புத்தாண்டின் முதல் நாளன்று பாத்திரம் கூட கழுவமாட்டார்களாம்.

6 – வீட்டில் உள்ள அலமாரியை காலியாக வைத்திருக்கக்கூடாது. எனவே உங்கள் வீட்டில் உள்ள அலமாரி காலியாக இருந்தால், புத்தாண்டின் முதல் நாளன்றே ஏதாவது பொருளால் நிரப்புங்கள். இல்லாவிட்டால் வருடம் முழுவதும் அலமாரி காலியாக இருப்பது போன்றே உங்கள் வாழ்வும் இருக்கும் என்று சில மக்கள் நம்புகின்றனர்.



7 – புத்தாண்டு பிறக்கும் தினத்தில் மட்டுமின்றி, முந்தைய நாளில் இருந்தே வீட்டின் ஜன்னல் கதவுகளை திறந்து வைத்திருங்கள். இதனால் முந்தைய வருடம் வீட்டில் புகுந்த துர்சக்திகள் அனைத்தும் வெளியேறிவிடுமாம்.

8– எதையும் உடைக்காதீர்கள். முக்கியமாக கண்ணாடியை தப்பித்தவறியும் நழுவ விட்டு உடைத்து விடாதீர்கள். கண்ணாடியை மட்டுமின்றி வேறு எந்த பொருளையும் உடைத்துவிடாதீர்கள். இதனால் வீட்டில் துரதிர்ஷ்டம் தான் குடிபுகும்.

9 – மிகவும் பிரபலமான மற்றும் உண்மையான ஓர் மூடநம்பிக்கை தான் இது. அது என்னவெனில், புத்தாண்டு தினத்தின் போது யார் முதலில் உங்கள் வீட்டிற்கு வருகிறார்களோ, அவர்களைப் போன்று உங்களுக்கு அந்த ஆண்டு இருக்கும் என்பது. குறிப்பாக வீட்டிற்கு வருபவர் உயரமாக, மாநிறமாக மற்றும் நன்கு அழகாக காட்சியளிக்க வேண்டும். இதனால் அந்த வருடம் முழுவதும் உங்களுக்கு சிறப்பான ஆண்டாக அமையுமாம்.



## நெடுந்தீவில் மீட்கப்பட்ட படகில் தமிழகத்திலிருந்து 6 பேர் வருகை

கொழும்பு, ஜன. 01

கடந்தவாரம் நெடுந்தீவுக் கரையில் மீட்கப்பட்ட படகில் தமிழகத்தில் உள்ள அகதி முகாங்களிலிருந்து இலங்கையைச் சேர்ந்த ஆறு பேர் சட்டத்துக்குப் புறம்பாக நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாகக் கடற்படை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நெடுந்தீவுக் கடற்கரையில் கடந்த 26ஆம் திகதி மீட்கப்பட்ட படகு தொடர்பில் ஒரு விரிவான நடவடிக்கையை மேற்கொண்டது.

அந்தப் படகு தொடர்பில் தலைமன்னார் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தேடுதலில் நடவடிக்கையில் தலைமறைவாக உள்ள ஐந்து பேர் கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சட்டத்துக்குப் புறம்பாக கடல் வழியாக நெடுந்தீவுக்கு வந்து பின்னர் தலைமன்னாருக்கு திரும்பினர். தலைமன்னார் கேபிள் ஹவுஸ் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தபோது ஒரு பெண் மற்றும் 3 ஆண்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

மேலும் அவர்களிடம் விசாரித்ததில், மற்றொரு ஆண் யாழ்ப்பாணம் பகுதியில் பதுங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டமையுடன் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் இலங்கையர்கள் என்றாலும் அவர்கள் சட்டத்துக்குப் புறம்பாக கடல் வழியாக இலங்கைக்கு வந்தமையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட ஆண்கள் 33, 36 மற்றும் 45 வயதுடைய தலைமன்னார், பேசாலை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் 63 வயதான கைது செய்யப்பட்ட பெண் இங்கிரிய பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் – என்றுள்ளது. (ஐ)

# நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத மஹிந்தவைப் பிரதமராக நியமித்தமை தவறு!

## அரசமைப்பை மீறும் செயல் எனச் சீறுகின்றார் திஸ்ஸ அத்தநாயக்



கொழும்பு,ஜன.01

பிரதமராக மஹிந்த ராஜபக்ஷவை நியமித்திருப்பதன் ஊடாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசமைப்பை மீறிச் செயற்பட்டு விட்டார் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர் அப்போது இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

19 ஆவது திருத்தத்தை இரத்து செய்து, 18 ஆவது திருத்தத்தை மீண்டும் அமுல்படுத்துவதற்கு புதிய அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்குப் பின்னால் நாட்டில் மீண்டுமொரு சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தும் யோசனையே இருக்கின்றது.

இந்நிலையில், அந்த முயற்சியை பொதுத் தேர்தலில் மக்கள் தவிடுபொடியாக்க வேண்டும். நாடாளுமன்றத்தை ஒத்திவைத்ததன் ஊடாக மக்களின் விருப்பு வெறுப்புக்களைத் தெரிவிக்கும் உரிமையை அரசாங்கம் பறித்துள்ளது.

எதிர்வரும் 03 ஆம் திகதி நாடாளுமன்றத்தை அழைத்து சிறிது நேரத்தில் சபையை மீண்டும் ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இது ஜனநாயக விரோத செயல். நாடாளுமன்றம் கூடுதலும் கருத்து தெரிவிப்பதும் மக்கள் பிரதிநிதிகளின் உரிமை.

ஆகையால் தற்போது அரசாங்கத்திற்கு பெரும்பான்மை இல்லாதிருப்பதால் அந்த உரிமையைப் பறிக்கப் பார்க்கிறது. 2015 ஆம் ஆண்டிலும் அப்படியான சம்பவம் ஏற்பட்டது. ஒக்டோபர் 26ம் திகதி நீதிமன்ற செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தற்போது நாடாளுமன்ற பெரும்பான்மை இல்லாமலேயே பிரதமர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இது அரசமைப்பிற்கு முரணானது என்று சுட்டிக்காட்டுகின்றோம்.

இப்போது நாடாளுமன்றம் 03 ஆம் திகதி கூடும்போது பொருளாதாரத் திட்ட உரை சாதாரண சம்பிரதாயமாக நிகழ்த்தப்பட்டு தேசிய உரை நிகழ்த்தப்படும்.

பின்னர் விவாதம் நடத்தப்படும். அதனையடுத்து நாடாளுமன்றம் அதனை ஏற்பதா, இல்லையா என்கிற வாக்கெடுப்பும் நடத்தப்படும். இவற்றைச் செய்யாமல் மார்ச் 02 ஆம் திகதிவரை நாடாளுமன்றை மீளவும் ஒத்திவைப்பதற்கான சூழ்ச்சி இடம்பெறுகின்றது. இது அநீதியானதும் அரசமைப்புக்கு முரணான விடயமுமாகும். நாட்டின் ஏனைய பிரச்சினைகளை மறைத்து இந்தப் பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது அரசாங்கம். – என அவர் கூறியுள்ளார்.

## அன்பர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துகள்!



காலைக்கதிர்
Kalaikathir



# சி.ஐ.டி. என கப்பம் வாங்கியவர்களில் ஒருவர் அளவெட்டியில் சிக்கினார்!

## மற்றொருவர் சிறைக்குள் இருந்து துணிகரம்

யாழ்ப்பாணம், ஜன. 01

பொலிஸ் புலனாய்வாளர் எனக் கூறி கப்பம் வாங்கிய குற்றச்சாட்டில் அளவெட்டியைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவருடன் தொடர்புடைய மற்றொருவர் சிறைச்சாலை ஒன்றில் தண்டனைக் கைதியாக இருக்கிறார் எனக் காங்கேசன்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவிக்கு வந்த பின்னர் முன்னாள் போராளிகள், போர்க் காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தவர்கள் மற்றும் குற்றச்செயல்களில் குற்றஞ்சாட்டப்பட்டோரின் குடும்பங்களுக்கு புலனாய்வாளர்கள் எனக் கூறுவோரால் அலைபேசி ஊடாகக் கப்பம் கோரப்பட்டது.

பொலிஸ் புலனாய்வாளர்கள் பேசுகின்றோம் எனத் தெரிவிக்கும் அவர்கள், குடும்பத்தில் ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவரைக் கைது செய்ய உத்தரவு கிடைத்துள்ளதாகவும் கைது செய்யாமல் விடுவதற்கு தாம் கூறும் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிடுமாறும் கோருகின்றனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பணி நிமித்தம் தங்கியிருக்கும் ஒருவருக்கு கடந்த வாரம் இவ்வாறு மிரட்டல் விடுக்கப்பட்டதால், அவர் 75 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.

அதன்பின்னர் அழைப்பு எடுத்தவரின் அலைபேசி இலக்கம் துண்டிக்கப்பட்டதால் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் பணத்தை வைப்பிலிட்ட சிட்டையுடன் அச்சுறுத்தலுக்குள்ளானவர் முறைப்பாட்டை வழங்கியிருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த காங்கேசன்துறை பொலிஸார், வங்கிக் கணக்கிலக்கத்துக்கு உரியவரை அளவெட்டிப் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்தனர்.

அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கப்பம் கோரி அலைபேசி அழைப்பை எடுத்தவர் சிறைச்சாலை ஒன்றில் தண்டனைக் கைதியாக இருபவர் எனத் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுப் பிற்பகல் முற்படுத்தப்பட்டார்..

இதேவேளை, புலனாய்வாளர்கள் எனக் கூறி அலைபேசியில் கப்பம் கோரப்பட்டால் எந்தவொரு பயமுமின்றி அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

## குடாநாட்டில் அதிகரிக்கும் கொள்ளைச் சம்பவங்கள்

### பீதியில் உறைந்துள்ளனர் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 01

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக நடைபெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் மத்தியில் ஒரு வித அச்ச நிலை ஏற்பட்டுள்ளது.

அச்சுவேலிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று திங்கட்கிழமை அதிகாலை புகுந்த கொள்ளைக் கும்பல் ஒன்று 45 பவுண் நகை, 30 ஆயிரம் ரூபாய் ரொக்க பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

அந்த வீட்டில் உள்ள வளர்ப்பு நாய் இடைவிடாது குரைத்துக்கொண்டு இருந்ததை அடுத்து குடும்பத்தலைவர் ஜன்னல் வழியாக வெளியே பார்த்த போது, வீட்டின் படலை திறந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

அதனை அடுத்து வீட்டின் முன் கதவினை திறந்து வெளியே சென்று படலையைப் பூட்டுவதற்கு முற்பட்டபோது , அவ்விடத்தில் மறைந்திருந்த கொள்ளையர்கள் அவரை ஆயுத முனையில் மடக்கியுள்ளனர்.

ஐந்து பேரை கொண்ட அந்தக் கொள்ளைக் கும்பல் முகங்களைத் துணிகளால் மறைத்து கட்டி இருந்ததுடன் கைகளில் வாள்கள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களை வைத்திருந்துள்ளது.

குடும்பத்தலைவரை பணயமாக வைத்துக்கொண்டு வீட்டிற்குள் சென்ற கொள்ளைக் கும்பல் வீட்டில் இருந்த 45 பவுண் நகை மற்றும் 30 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தக் கொள்ளை சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

அதேவேளை கடந்த 27ஆம் திகதி சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீட்டினுள் புகுந்த கொள்ளையர்கள் , 47 பவுண் நகைகளையும் ஒரு தொகை பணத்தினையும் கொள்ளையிட்டுள்ளனர்.

28ஆம் திகதி பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் 24 பவுண் நகைகளையும், ஒரு தொகை பணத்தினையும் கொள்ளையிட்டுத் தப்பி சென்றுள்ளனர்.

இவ்வாறாக கடந்த நான்கு நாள்களில் மூன்று வீடுகளில் பெரும் கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை மக்கள் மத்தியில் அச்ச நிலையை ஏற்படுத்தி உள்ளது. (ஐ)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





### திரு.தியாகரராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சரும்
யாழ்.– கொழும்பு பாராளுமன்ற உறுப்பினரும்)

ஆருயிர் தந்தையே!
அன்புச் சிறைக்குள்
அகம் மகிழ்ந்த எங்களை
துன்பச் சிறை வைத்த
துயர நாள் இந்நாள்!
வஞ்சக் கரங்கள் செய்த
வன் செயலால் மிக
வருந்தி அழுத நாள் இந்நாள்!
உங்கள் கனவுகள் எல்லாம்
பிள்ளைகள் எங்களால்
நிறைவேறும் இந்நேரத்தில்
அன்புத் தந்தையே உங்களை
அகல விழி திறந்து தேடுகின்றோம்.
என்றாவதோர் நாள் காண்போம்
என்ற ஏக்கத்துடன்

**பிள்ளைகள்**

பவதாரணி (மகள்)
பிரணவன் (மகன்)
பவித்திரா (மகள்)

தகவல்:-
திருமதி விஜயகலா மகேஸ்வரன்
இல.32, 36 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06
தொலைபேசி :- 011 2360679

இல.276, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 2221877

**முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரனின் 12ஆவது நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**



# மக்களின் மனங்களில் வாழும் மகேஸ்வரன்

கடந்த மூன்று தசாப்த காலமாக எமது நாட்டில் இடம்பெற்ற கொடூர யுத்தம் காரணமாக நாம் பல்லாயிரக்கணக்கான உறவுகளைப் பறிகொடுத்துள்ளோம். உயிர்களையும் உடைமைகைளயும் இழந்த தமிழ் மக்கள் இன்னமும் அந்தச் சோகத்திலிருந்து விடுபட முடியாது தவித்து வரும் நிலைமை காணப்படுகிறது. யுத்தம் இடம்பெற்ற போது தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப, துயரங்களைக் கண்டு துடித்த அரசியல்வாதியாக , அமரர் மகேஸ்வரன் திகழ்ந்தார்.

யுத்த காலத்தின் போது கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் இளைஞர், யுவதிகள் வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டனர். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படும் இளைஞர், யுவதிகள் காணாமலும் ஆக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கு பகுதியில் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அத்தியாவசிய பொருள்கள் எவற்றையும் கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது. குண்டுவீச்சு, ஷெல் தாக்குதல்களில் நாள்தோறும் தமிழ்மக்கள் பலியாகி வந்தனர். இந்த வேளையில்தான் தமிழ் மக்களின் உள்ளக்குமுறல்களை வெளிப்படுத்தும் வகையில் மகேஸ்வரன் குரல் கொடுத்தார்.

யுத்த காலத்தின் போது அன்றைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக எவருமே குரல் கொடுக்க அஞ்சிய போதும் துணிந்து நின்று தமிழ் மக்களுக்காக நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்றத்திற்கு வெளியிலும் மகேஸ்வரன் போராடினார். தமிழ் மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களில் எந்தவித பயமுமின்றி சர்வேதசத்திற்கு எடுத்துக்காட்டும் வகையில் மகேஸ்வரன் செயற்பட்டிருந்தார்.

அன்னாரது 12 ஆவது நினைவு தினம் இன்றாகும்.

குறுகிய காலம் அரசியலில் இருந்தாலும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகவும் இந்து கலாசார அமைச்சராகவும் பதவி வகித்த மகேஸ்வரன் தமிழ் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளை செவ்வேன ஆற்றியிருந்தார்.

1966 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆம் திகதி காரைநகரில் பிறந்த மகேஸ்வரன்காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி என்பவற்றில் கல்வி பயின்றார். வர்த்தகத் துறையில் ஈடுபாடு காட்டிய அவர் 1999 ஆம் ஆண்டு அரசியலில் காலடி எடுத்து வைத்தார். அப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சி இடம்பெற்று வந்தது. 1999 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் த லைவரான ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டிருந்தார். அவருக்கு ஆதரவாக யாழ். மாவட்டத்தில் மகேஸ்வரன் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

அன்று அச்சமான சூழ்நிலையிலும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக யாழ்ப்பாணத்தில் பல்வேறு நடவடிக்கைகளையும் இவர் மேற்கொண்டார். ஆனால் அந்தத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே மீண்டும் வெற்றி பெற்றிருந்தார். இவ்வாறு அரசியலில் பிரேவசித்த மகேஸ்வரன், 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின்சார்பில்முதன்மைவேட்பாளராகப்போட்டியிட்டார்.

இந்தத் தேர்தல் இடம்பெற்ற போது யாழ். குடாநாட்டைக் கைப்பற்றும்நோக்குடன் விடுதைலப்புலிகள் மிருசுவில் பகுதி வரை வந்திருந்தனர்.

அவ்வாறானெதாரு சூழலில் பல்வேறு ஆயுதக் குழுக்கள் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளின்அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில்தேர்தலில் போட்டியிட்டார் மகேஸ்வரன். 47 ஆண்டுகளுக்குப்பின்னர்அக்கட்சியின் சார்பில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக வெற்றிவாகை சூடினார். நாடாளுமன்றம் சென்ற நாள் முதலே வடபகுதி மக்கள் அனுபவிக்கும் துன்ப துயரங்களுக்கு எதிராக அவர் குரல் கொடுத்தார். அன்று வட பகுதிக்கு பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டிருந்த காலம். எரிபொருள் உட்பட அத்தியாவசிய பொருள்களின் விலைகள் பல் மடங்காக காணப்பட்டன. இதனால் எரிபொருள்களை வட பகுதிக்கு அனுப்புமாறு கோரி நாடாளுமன்றத்திற்கு தெரிவாகி சில மாதங்களிலேயே மகேஸ்வரன் போராட்டம் நடத்தினார். நாடாளுமன்றத்திற்கு மாட்டு வண்டிலில் அவர் சென்று தனது எதிர்ப்பைக்காணப்பித்தார். வடபகுதியில் மக்கள் அனுபவிக்கும் துன்பங்கைள இவ்வாறு அவர் வெ ளிப்படுத்தினார்.

2001 ஆம்ஆண்டு நாடளுமன்றம்கலைக்கப்பட்டு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. இதன் போது யாழ்ப்பாணத்தில்போட்டியிட்ட மகேஸ்வரன் இரண்டாவது தடவையாக வெற்றி பெற்றார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜக்கிய தேசிய முன்னணி ஆட்சியமைத்ததையடுத்து மகேஸ்வரனுக்கு இந்து கலாசார அமைச்சு வழங்கப்பட்டது. அமைச்சராக இருந்த வேளையில் தமிழ் மக்களுக்கான பல்வேறு உதவித் திட்டங்களை மேற்கொண்டமையுடன் இந்து சமயத்தின்வளர்ச்சிக்கும்உறுதுணையாகச்செயற்பட்டார்.

இந்து மதத்தவர்கள் மதம் மாற்றப்படுவதை தடுப்பதற்காக மதமாற்றத் தடைச் சட்டத்தையும் கொண்டு வருவதற்கு அவர் முயன்றார். அமைச்சராக இருந்தேபாது இந்து ஆலயங்கைளப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். இந்தியாவுக்கு அடிக்கடி சென்று இந்துமத பீடாதிபதிகளைச் சந்தித்தார். தமிழகத்துடன் நல்லுறவைப் பேணுவதற்கு அவர் விரும்பியமையுடன் அதற்கான செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.

இவ்வாறு சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவரது செயற்பாடுகள் அமைந்திருந்தன. 2004 ஆம் ஆண்டு மீண்டும் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் இடம்பெற்ற போது யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடியாத நிலைமை அவருக்கு ஏற்பட்டது. இதனால் கொழும்பில் அவர் போட்டியிட்டார். கொழும்பில் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த தமிழர்கள் இவரது வருகையை விரும்பவில்லை. ஆனாலும் துணிச்சலுடன் கொழும்பில் போட்டியிட்டு பிரசாரத்தில் ஈடுபட்டபோது கொச்சிக்கடையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். ஆனாலும் மயிரிழையில் உயிர் தப்பிய மகேஸ்வரன், கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோதே வெற்றிவாகை சூடினார்.

இதன் பின்னர் கொழும்பு மாவட்ட எதிர்க்கட்சி எம்.பி.யாக அவர் இறக்கும் வரை கடமையாற்றினார். 2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்றதை அடுத்து தமிழ் மக்களுக்கு எதிரான கெடுபிடிகள்அதிகரிக்கப் பட்டன. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் நாள்தோறும் வகைதொகையின்றி தமிழ் இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டனர், கடத்தப்பட்டனர், சித்திரவதை செய்யப்பட்டனர், கைது செய்யப்பட்ட இளைஞர், யுவதிகள் பூசா தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவ்வாறான கைதுகளுக்கு எதிராக மகேஸ்வரன் துணிந்து நின்று போராடினார். இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட போது கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றையும் மகேஸ்வரன், ஏற்பாடு செய்து நடத்தினார். கொட்டாஞ்சேனையிலிருந்து காலி முகத்திடல் வரை இந்தப்பேரணி நடத்தப்பட்டது.

அன்றைய அரசாங்கம் பெரும் கெடுபிடிகளை மேற்கொண்ட போதிலும் எதற்கும் அஞ்சாது மகேஸ்வரன் செயற்பட்டார். இந்தக் கைதுகள் மற்றும் தடுத்து வைத்தலுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குரல்கொடுத்த மகேஸ்வரன் தனது மேல்சட்டையையும் களைந்து தனது எதிர்ப்பினைக் காண்பித்திருந்தார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# நன்மை பெற புத்தாண்டு எழுக மாதோ!

— கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் —



உலகமெலாம் அன்பதனால் நிறைந்து நல்ல
ஒப்பற்ற பெருமைகளைக் காணவேண்டும்
திலகமென நம் தேசம் ஒளர்ந்து இந்த
திகழ் இந்துமா கடலின் முத்தாய் மாறி பலர்
புகழப் பெருமைதனைக் கொள்ள வேண்டும்
பாரெல்லாம் பகை ஒழிந்து உறவு பொங்க
நலம் திகழும் சோதரராய் உலக மாந்தர்
நன்மை பெற புத்தாண்டு எழுக மாதோ!

புத்தாண்டு பிறக்கையிலே அனைவர் நெஞ்சும்
புறப்பகையும் அகப்பகையும ஒழிந்து நல்ல
சத்தான நெறியதனைப் பேணி நிற்க சகம்
முழுதும் நன்மையது செழிக்கவேண்டும்
வித்தான தீமையெலாம் வீழவேண்டும்
விறலோடு மனிதர் அறம் பேணவேண்டும்
இத்தோடு தீயரெலாம் ஒழிந்தார் என்றே
இனிய ஒரு பொற்காலம் பிறக்கவேண்டும்.

விஞ்ஞானக் கருவிகளும் மனிதர் தம்மை
விழுங்குகிற பெருநாசம் தொலையவேண்டும்
பஞ்சாக மனிதர்களைப் பறக்கச் செய்யும்
பணத்தாசை எல்லையுற பண்பால் ஓங்கி
மெஞ்ஞானம் வளர்ந்திடவே மெல்ல மெல்ல
மேன்மைமிகு உயர்வெல்லாம் கிடைக்க
வேண்டும்
அஞ்ஞானம் ஒழிந்தேதான் அவனியெங்கும்
அருள் மழையும் பொழிநத்டுக! புதிய
ஆண்டில்.

எல்லோர்க்கும் என இறைவன் படைத்த இந்த
எழில் உலகை மனிதமனக் கீழ்மை தன்னால்
வல்லோர்கள் தம் கையில் எடுத்து நாளும்
வகை வகையாய்ப் பிரித்தே தம் உரிமை பேசி
மல்லாண்டு நல்லுலகை அழித்து நின்றார்
மானுடத்தை மனம் நோகச் சிதைத்து நின்றார்.
பொல்லாத அவர்தாமும் திருந்தி இந்தப்
புத்தாண்டில் உயர்நத்டவே வேண்டி நிற்போம்.

மதத்தாலும் மொழியாலும் பிரித்து நல்ல
மானுடத்தைச் சிதைத்தேதான் மருட்சி
செய்வோர்
விதைக்கின்ற தீமையெலாம வீழவேண்டும்
விண்ணார்ந்து மனிதகுலம் ஓங்கவேண்டும்
சதிக்காக மக்களையே பிரித்து நிற்கும்
சண்டாள அரசியலார் திருநத்வேண்டும்
புதுக்காதல் அறம் நோக்கி புகுந்து பாய
புத்தாண்டில் அவராலும் நன்மை வேண்டும்.

வள்ளுவனார் வழி நின்று கம்பன் செய்த
வளமான காவியத்தைப் படித்து இந்த
நல்லுலகம் அறம் நோக்கி உயரவேண்டும்
நாளும் மண் விண்ணாக மாறவேண்டும்
எல்லையில்லா விரிந்த மனம் எவர்க்கும் வாய்த்து
இதயமெலாம் சங்கமிக்கும் உறவு வேண்டும்
புல்லரெலாம் திருந்திடவே கலியும்
வீழ புகழோடு கிருதயுகம் எழுக மாதோ!

காலைக்கதிர் Kalaikathir



# யாழ் ஊடக அமையத்தின் விருது வழங்கும் விழா



யாழ்.ஊடக அமையத்தின் 2019 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் மற்றும் வருடத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் யூ.எஸ். விருந்தினர் விடுதியில் நடந்தது.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மௌன அஞ்சலியுடன் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் பொது சுடரினை ஜயாத்துரை நடேசனின் துணைவியார் ஏற்றிவைத்தார்.

இவ்விருது வழங்கும் நிகழ்வில் பொன்னையா மாணிக்கவாசகருக்கான அமரர் மயில்வாகனம் நிமலராஜன் விருதினையும், நடேசபிள்ளை வித்தியாதரனுக்கான அமரர் தராகி டி.சிவராம் விருதினையும், விஸ்வராஜா காந்தகுமாருக்கான அமரர் ஜயாத்துரை நடேசன் விருதினையும், வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் வழங்கி வைத்தார்.

சுப்பிரமணியம் பாஸ்கரனுக்கான அமரர் செல்வராஜா ரஜிவர்மன் விருதினை 'தினக்குரல்' பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் எஸ்.கேசவராஜா வழங்கி வைத்தார்.

செல்வி சதாசிவன் சகீலாவிற்கான அமரர் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி விருதினை வடக்கு மாகாண சபையின் பேரவைத் தவிசாளர் சி.வீ.கே.சிவஞானம் வழங்கிவைத்தார்.

தர்மபாலன் ரிலக்சனுக்கான அமரர் சகாதேவன் நிலக்சன் விருதை நிலக்சனின் பெற்றோர் வழங்கிவைத்தனர்.

ஹாஜிமீராலெப்பை லாபீருக்கான அமரர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் விருதினை வணபிதா ரூபன் மரியாம்பிள்ளை வழங்கிவைத்தார்.















# ரணில் – சஜித் பிரேமதாஸ பேச்சு இழுபறி நிலையில்

## கருவை பிரதமர் வேட்பாளராக நியமிக்க ஆலோசனை

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாச எம் பிக்கும் நேற்று முன்தினம் நடைபெறவிருந்த சந்திப்பு இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கட்சித் தலைமை பொறுப்பை ரணில் தொடர்ந்து தனது வசம் வைத்திருத்தல், கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை பிற்போடல் போன்ற காரணங்களால் அதிருப்தியடைந்துள்ள சஜித் பிரேமதாஸ இந்தச் சந்திப்பைத் தவிர்த்துள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை சபாநாயகர் கரு ஜயசூரியவை பிரதமர் வேட்பாளராக வரும் நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்க ரணில் ஆலோசித்து வருகின்றமை கட்சிக்குள் புதிய நெருக்கடியைத் தோற்றுவித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் சஜித்துக்கு ஆதரவாக இருப்பதால் அவர்களுடன் தனித்தனியே பேச்சு நடத்த ரணில் தீர்மானித்துள்ளார்.நேற்றுமுன்தினம் இரவும் அப்படியான சந்திப்பொன்றில் அவர் ஈடுபட்டாரென அறியமுடிந்தது.

# முல்லைத்தீவிலும் 'அம்மாச்சி'

முல்லைத்தீவு, ஜன. 01

வட மாகாண விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாணம் எங்கும் 'அம்மாச்சி' என்றபேரில் பாரம்பரிய உணவகங்கள் திறக்கப்பட்டுவருகின்றன.

அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி நகரில் அம்மாச்சி உணவகம் ஒன்று நாளை வியாழக்கிழமை திறந்துவைக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்விற்கு முல்லைத்தீவு அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சதாசிவம் கனகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கட்டடத்தை திறந்துவைக்கவுள்ளார்.

இதன் மூலம் மல்லாவி மக்களுக்கு பாரம்பரிய உணவு வகைகளை பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிட்ட உள்ளது.

இதேவேளை அன்றைய தினம் அம்மாச்சி உணவகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள விவசாயப் பயிற்சி நிலையக் கட்டடமும் திறந்துவைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மக்களின் மனங்களில்...

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனைவிட நாடாளுமன்றத்தின் செங்கோலையும் எடுத்துச்சென்று எதிர்ப்பை வெளிப்படுத்தியும் இருந்தார். இந்த நிலையில் தான் 2008 ஆம்ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டுக்காகச் சென்ற போது ஈவிரக்கமற்ற முறையில் சுட்டுக்கொல்லப் பட்டிருந்தார்.

தற்போதைய நிலையில்கூட மகேஸ்வரன் உயிருடன் இருந்திருந்தால் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும் அரசியல் தீர்வுக்காகவும் பெரும்பாடுபட்டிருப்பார். தமிழ் மக்களின் மனங்களில் தொடர்ந்து வாழும் மகேஸ்வரனின் வெற்றிடமானது நிரப்பப்படாத ஒன்றாகவே காணப்படுகிறது. ஒரு துணிவு மிக்க அரசியல் வாதியாக மனதில் சரி என்று பட்டைத் துணிவுடன் கூற வல்லவராகத் தூய்மையான செயல் வீரராக அவர் திகழ்ந்தார்.

இவரது பணியை தற்போது அவரது துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் முன்னெடுத்து வருகிறார். 2010ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற அவர், 2015ஆம் ஆண்டு தேர்தலிலும் வெற்றி பெற்று சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சராகவும், கல்வி இராஜாங்க அமைச்சராகவும் பதவி வகித்தார். தற்போதும் தனது கணவனின் பணியை அவர் தொடர்ந்து வருகிறார்.

மகேஸ்வரன் மறைந்தாலும் மக்களின் மனங்களில் அவர் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றார் என்பதே உண்மையாகும்.

எஸ்.ஜெகநாதன்.

யாழ்ப்பாணத்தில்!
SPECIAL OFFERS
கற்பகவனம் 2 எழுதுமட்டுவாழ்
1 ஏக்கர் - 16 பரப்பு
40 தென்னை 10-15 மாமரம்
40-60 தேக்கு கல் இருக்கை 01 தொகுதி
20 கஜூ மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்
2 ஏக்கர் - 32 பரப்பு
80 தென்னை 20-30 மாமரம்
80-90 தேக்கு கல் இருக்கை 01 தொகுதி
40 கஜூ மரம்
சுற்று முட்கம்பி வேலி படலையுடன்
5 வருட பராமரிப்பு
15 அடி அகலப் பாதை
24 மணிநேர பாதுகாப்பு
மாதாந்த பராமரிப்பு அறிக்கை
விடுமுறை வீட்டிற்கான இடவசதி
துறைசார் வல்லுனர்களின் ஆலோசனை
விளைபொருட்களுக்கான சந்தை வசதி
பொதுவான வசதிகள்
பொதுவிடுதி ~ உணவகம் ~ உடற்பயிற்சிக்கூடம் ~ நீச்சல் தடாகம்
விளையாட்டுத்திடல் ~ நடைப்பயிற்சிக்கான பாதை ~ மீன்பிடி குளம்
முந்திரிகைத் தோட்டம் ~ மூலிகைத் தோட்டம்

சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்.
078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD
Reg. No.: PV 115306

# உழவு இயந்திரம் கவிழ்ந்து 8 தொழிலாளர்கள் காயம்!

யாழ்ப்பாணம், ஜன. 01

தார்ப் பரல்கள் மற்றும் தொழிலாளர்களை ஏற்றிச்சென்ற உழவு இயந்திரம் ஒன்று பொன்னாலைச் சந்தியில் தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த 8 பேர் காயமடைந்தனர். இவர்களில் இருவர் படுகாயமடைந்தனர். நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 8.40 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காரைநகரில் வீதிப் புனரமைப்புப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்கள் உழவு இயந்திரத்தில் 10 தார்ப்பரல்களையும் ஏற்றிக்கொண்டு பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வீதியூடாகச் சென்று பொன்னாலைச் சந்தியால் காரைநகர் வீதிக்கு திரும்ப முற்பட்டனர்.

வேகமாகச் சென்ற உழவு இயந்திரம் பொன்னாலைச் சந்தியில் உள்ள வளைவில் திரும்ப முற்பட்டபோது உழவு இயந்திரப் பெட்டி உழவியந்திரத்தை விட்டு தனியாகக் கழன்று தடம் புரண்டது.

இந்த விபத்தின்போது, உழவு இயந்திரப் பெட்டி தலைகீழாகக் கவிழ்ந்தது. அதில் பயணம் செய்தவர்களில் சிலர் தூக்கி வீசப்பட்ட நிலையில் சிலர் பெட்டிக்குள் அகப்பட்டுக்கொண்டனர்.

அவர்கள் தார்ப்பரல்களுடன் சேர்ந்து வீழ்ந்தனர். பெட்டிக்குள் சிக்கியவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் மீட்டெடுக்கப்பட்டனர்.

படுகாயமடைந்த இருவர் உட்பட 6 பேர் உடனடியாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மற்றைய இருவர் காரைநகர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

மூளாய்வைத்தியசாலைக்குகொண்டு செல்லப்பட்டவர்கள் பின்னர் நோயாளர் காவு வண்டி மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டனர்.

இந்த விபத்தில் பொஜுன்னாலையைச் சேர்ந்தவர்களான மு.நாகமுத்து, மா.ஶ்ரீவானந்தம், நா.றஞ்சன் , வ.தினுஜன், ரா.தபுசன் , வ.பசுங்கிளிராசா ஆகியோரும் பல்லசுட்டியைச் சேர்ந்த வ.வசிகரன் , எஸ்.துஜிபன் ஆகியோருமாக 8 பேர் காயமடைந்தனர். இவர்களில் நாகமுத்து, வசிகரன் ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர்.

பசுங்கிளிராசா, துஜீபன் ஆகியோர் காரைநகர் பிரதேச வைத்தியசாலையிலும் ஏனையோர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதிவேகமே விபத்துக்குக் காரணம் என பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை


அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
இல.8, மாநகர சபை புதிய கடைத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், துபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27 .12.2019 இல் வெளியிடப்பெற்றது.